Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-04 18-05-2005 புதன்கிழமை ஓசை-89



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11750)

# பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலே உறுதியளித்த நிதியுதவி வழங்கப்படும்!

## பல உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்து

(கண்டி)

**சுனாமி அனர்த்த மீள்கட்டமைப்பிற்கு நிதியுதவி அளிப்பதாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்துள்ளபோதிலும் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பட்சத்திலேயே இவ்வுதவிகள் வழங்கப்படுமென உதவி வழங்கும் பல நாடுகள் வலியுறுத்திக் கூறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

கண்டியில் நேற்று முன்தினம் கூடி சிறீலங்கா விற்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் கட்டுமானம் செய்வதற்கென நிதியுதவி அளிக்க உதவி வழங்கும் நாடுகள் முன்வந்துள்ளபோதும் உதவி வழங்கும் பல முன்னணி நாடுகள் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கம் இணக்கப்பாடு ஒன்றைக் காணும்போதே நிதியுதவிகள் வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில நாடுகள் நிதியுதவி அளிப்பதற்குப் பொதுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான சூழலை பொதுக்கட்டமைப்பு உருவாக்க உடன்பாடு ஏற்படுத்தும்

### - உலக வங்கியின் பிரதித் தலைவர் நம்பிக்கை

பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு உதவி வழங்கும் சமூகம் உறுதியான ஆதரவை அளிக்கின்றது. இது தொடர்பான உடன்பாடு சமாதான நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான சூழ்நிலைகளை உருவாக்கும்மென்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும் என உலக வங்கியின் பிரதித்தலைவர் புல் பட்டேல் தெரிவித்தார். கண்டியில் நேற்று முன்தினம் ஆரம்பமான இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள், அமைப்புகள் என்பவற்றின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கடல்கோள் அனர்த்தத்தைத்தொடர்ந்து எதிர்நோக்கிய சவால்களை இலங்கை அரசாங்கமும், மக்களும், சர்வதேச சமூகமும் துரிதமாக எதிர்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்ததாகவும்,அழிவிலிருந்து மீட்சிபெறும் நிதியுதவியைப் பொறுத்தவரை அது ஒரு கடினமான விடயமாக இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டதுடன், தற்போது உள்ள பிரச்சினை அமுலாக்கமே எனவும் உறுதிபடத்தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி ஆட்சிப்பொறுப்பை கையளித்தாலும் ஐ.தே.க. ஏற்காது

### - ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள பொதுக்கட்டமைப்பு, மின்சாரசபை மறுசீரமைப்பு போன்ற முக்கிய விடயங்களில் அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. விடாப்பிடியாக முரண்டுபிடித்து வருகின்றது. இந்த நிலையில் அரசைக் கொண்டு நடத்துவது அசாத்தியமாக இருப்பதனால் ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பதே சிறந்ததென பிரதமரே சனாதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளார். ஆனால் சனாதிபதியோ, பிரதமரோ ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியைக் கையளிக்க முன்வந்தாலும் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி-ஜே.வி.பி. சந்திப்பு கைவிடப்பட்டது

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையில் நேற்றிரவு இடம்பெறவிருந்த சந்திப்புக் கைவிடப்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து சனாதிபதி நேற்றுமாலை கொழும்பு திரும்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் ஏழு சடலங்கள் நேற்றுக் கரையொதுங்கின!

நெடுந்தீவுக் கரையில் ஏழு சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. தமிழ் நாட்டிலிருந்து மன்னாருக்குத் திரும்பியபோது படகு கடலில் மூழ்கியதால் உயிரிழந்தவர்களின் சடலங்களே இவை. நெடுந்தீவின் கிழக்கு, மேற்குக் கரைகளில் இச் சடலங்கள் கரையொதுங்கின. சடலங்களில் ஐந்து ஆண்களின் சடலங்களாகும். மற்றது ஒரு பெண்ணின் சடலம், ஒரு பெண் குழந்தையின் சடலம் ஆகியவை கரையொதுங்கின. உடல்கள் சேதமான நிலையிலேயே கரை ஒதுங்கின. இவற்றில் ஒரு சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புத்தர்சிலையுள்ள இடத்தில் கைக்குண்டு வீச்சு!

### -இளைஞர் படுகாயம்

திருகோணமலை பேருந்து நிலையம் அருகில் நேற்று முன்தினமிரவு 11.15 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இதில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் குழுமியிருந்த இளைஞர் ஒருவர் காயத்திற்கு உள்ளாகியுள்ளார். அத்தோடு புத்தர்சிலைக்கும் சிறு சேதம் ஏற்பட்டது.

இவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக பொலிசாரால் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடைபெற்ற இடத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.. இங்கு இராணுவத்தினரும், கடற்படையினரும், பொலிசாரும் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். (32)

## புத்தர்சிலை நிறுவப்பட்டதைக் கண்டித்து திருமலையில் நேற்றுப் பூரண ஹர்த்தால்

### -குளக்கோட்டன் படைப்பிரிவு கடும் எச்சரிக்கை

(திருமலை)

திருகோணமலை பேருந்து நிலையத்தின் அருகில் ஆட்டோ தரிப்பு நிலையம் அமைந்துள்ள காணியில் புத்தர்சிலை ஒன்று நிறுவப்பட்ட செயலைக் கண்டித்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை திருகோணமலை நகரில், திருமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையின் அழைப்பை ஏற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகள், மாகாணசபை அலுவலகங்கள், அரச மற்றும் தனியார் வங்கிகளின் கிளைகள் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பேருந்துகள் சில காலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் பொதுமகனின் காது துண்டிப்பு

திருமலை மரத்தடிச் சந்திப் பகுதியில் தமிழ்ப் பொதுமகன் ஒருவரின் காது சிங்களக் காடையர் குழுவால் நேற்று வெட்டப்பட்டது.

புத்தர்சிலை வைக்கப்பட்டமையை அடுத்து திருமலையில் பதற்றம் நிலவி வருகின்றமை தெரிந்ததே.

இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் ஒருவரின் காது சிங்களக் குழுவொன்றினால் வெட்டப்பட்டுள்ளது.


## திருமலை நகரில் கைக்குண்டு வீச்சு ஒருவர் பலி; மூவர் படுகாயம்!

### -ஊரடங்குச் சட்டமும் அமுல்

(திருமலை)

திருகோணமலை நகரில் மரத்தடிச் சந்தியில் கடை ஒன்றின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் மரணமானார்.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது. இதேவேளை நேற்றுப் பிற்பகல் 3.30 மணியிலிருந்து மறுஅறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் திருகோணமலை நகரில் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டுள்ளதாகப் பொலிசார் அறிவித்தனர்.இதனிடையில் பதற்ற நிலையில் காணப்படும் மரத்தடி ஏகாம்பரம் வீதி, மற்றும் ஏனைய பகுதிகளில் இராணுவத்தினரின் உந்துருளிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். என்று பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தனர். (25)



சர்ச்சைக்குரிய புத்தர்சிலை

## வரி விளம்பரம்

### தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மருதநகர் பன்னங்கண்டி வட்டக்கச்சி பெரியபாலத்திற்கு அருகில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்னைநாற்று உற்பத்திப்பகுதியில் தென்னம் பிள்ளைகளை, நேரடியாகத் தொடர்பு கொண்டோ அல்லது கிளிநொச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் தொடர்பு கொண்டோ பெற்றுக்கொள்ளலாம். (6127)

### N.E.C வகுப்புக்கள் ஆரம்பம்

N.E.C, 9வீதி-கிளிநொச்சி, A/L 2007 கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களிற்கான பிரிவு II வகுப்புக்கள் 21.05.2005 சனிககிழமைக் 10.00 மணிக்கு ஆரம்ப மாகின்றது.

N.E.C,A.9 வீதி -கிளிநொச்சி A/L2007 கலைப்பிரிவு வகுப்பிற்கான ஆசிரியர்கள் தமிழ். S.லோகேஸ்வரன் (B.A.Hons Tamilspl) இந்து நாகரீகம் -கனைக்ஸ் (B.A.Hons), புவியியல்- ஞானம் (B.A.Hons), அளவையியல் -அருணகிரி, ஆங்கிலம்-சச்சிதானந்தன் (Sip.in English) (6122)

### காணவில்லை

171 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி வே.யோகராஜா என்பவருடைய மாவெள்ளை, மைக்கண்ணன் ,கேப்பை நாம்பம் குறி- S.P கடந்த சில தினங்களாக காணவில்லை. கண்டு தருபவர்களுக்கு சன்மானமும் வழங்கப்படும். தொடர்பு: 171, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி. (சி.11899)

### 2005-A/L

A/L பரீட்சைக்குரிய பொதுஅறிவு, பொதுஆங்கிலம் உயர்கல்விச்சேவை நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. வன்னியிலுள்ள சகல அறிவமுது புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (6134)


### அபிவிருத்திச்சபைக் கூட்டம்

நாளை மறுதினம் மாலை 3.00 மணிக்கு பளை வைத்தியசாலையில் அபிவிருத்திசபைக்கூட்டம் நடைபெற இருப்பதால் மருந்துவமனை யின் வளர்ச்சியில் அக்கறை உள்ள அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு மருத்துமனை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (கு)

# செல்வாநகரில் வீடு தீப்பிடித்தது: பல இலட்சம் ரூபா பொருட்கள் நாசம்


(நமது நிருபர்)

கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியதுடன் அங்கிருந்த இலத்திரனியல் உபகரணங்களும் அழிந்துள்ளன.



நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. செல்வா நகரைச் சேர்ந்த பா.சிறீதர் என்பவருடைய வீடே எரிந்து சாம்பராகியுள்ளது.

இங்கிருந்த பலஇலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும், கணனி, கமரா, மற்றும் இலத்திரனியல் பொருட்களும் முற்றாக அழிந்துள்ளன. (சு)



அவுஸ்திரேலியா நாட்டின் குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் ஜோன்வைற்கோல் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவாக்கும் இயந்திரம் ஒன்றை நேற்று அன்பளிப்பாக வழங்கியுள்ளார். வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் வைத்து வைத்தியகலாநிதி பிறைற்றனிடம் இயந்திரத்தைக் கையளித்தார். (படம்: குகன்)

## புதிய பிரிவு ஆரம்பம்

புதுக்குடியிருப்பில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க புதிய பிரிவு ஆரம்பம்

ஆசிரியர்-இ.றஜித்

பெயர் பதிந்தவர்களும், பதிவு செய்யவுள்ளோரும் 18.05.2005 புதன்கிழமை (இன்று) மாலை 5.30 மணிக்கு வருகை தரவும்.

...- பாஸ்அலுவலகம் முன்பாக
முல்லைவீதி, புதுக்குடியிருப்பு. (5925)

# முன்பள்ளி அபிவிருத்தி தொடர்பாக முல்லையில் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகளினது முன்னேற்றம் தொடர்பாகவும், மாணவர்களது செயற்றிறன்விருத்தி தொடர்பாகவும் இம்மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லை அகதிகள் புனர்வாழ்வு மண்டபத்தில் கடந்த 15 ஆம் திகதி காலை ஒனபது மணிக்கு முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவு, முன்பள்ளிகளின் அபிவிருத்தி, முன்பள்ளிகளின் சுகாதாரத்தைப் பேணல், சிறார்களின் உடற்சுத்தம் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், தீர்வுக்கான வழிமுறைகளும் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நிறுவன இணைப்பாளர், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முன்பள்ளி இணைப்பாளர் சந்திர வதனி, ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் செ.பாண்டியன் உட்பட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

அன்றையதினம் பகல் 2.30 மணிக்கு சங்கீதா முன்பள்ளியிலும் நிறுவன இணைப்பாளர் க.பாலசுப்பிரமணியம் தலைமையில் பெற்றோர்,ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

தலைமையுரையினைத் தொடர்ந்து, முன்பள்ளி மேம்பாட்டுப் பணிப்பாளரால் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. முன்பள்ளி ஆசிரியர்களின் நடவடிக்கைகள், பிரதேச வேலைத்திட்டம் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டது. வலய உப தலைவர் தங்கவேலாயுதம், முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் பூ.தட்சாயினி,திட்டப்பணிப்பாளர் சி.பிரியதர்சினி உட்படப்பலர் கலந்து கொண்டனர். (கு)


### தமிழக ஓவியர் புகழேந்தியின்

## புயலின் நிறங்கள்



தமிழீழ விடுதலைப்போர் வரலாற்றுப்பதிவு

ஓவியக் காட்சியும் பயிலரங்கும்
18,19, மே 2005 (இருநாட்கள்)
அழகியல் கலாமன்றம் கிளிநொச்சியில்!

தமிழீழ மக்கள் வடித்த கண்ணீரை, தடித்த சிங்கள இனவெறியர்களின் குண்டுகளில் வீழ்த்தப்பட்ட தமிழன் உடலை, அந்த மண்ணில் வெடித்த நெருப்பை அவர் ஓவியங்களாய்த் தருகிறார்.

புயலின் நிறங்கள் என்னும் விடுதலை குறித்த புகழேந்தியின் ஓவியங்கள் வீச்சானவை தகர்க்கப்பட்டது. எங்கள் வீடல்ல-நாடு- இது ஓர் ஓவியம், பதுங்கு குழியும் பிதுங்குவிழியுமாய்-இது ஓர் ஓவியம், இழப்பதற்கு முடிவெடுத்தோம்-பெறுவதற்காக- இது ஓர் ஓவியம், இனவெறி கால்வைக்கும் இடமெல்லாம் மிதிபட்டுக்கசியும் தாயின் முலைகள்-இது ஓர் ஓவியம், எனதமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் அவர் ஓவியங்கள் நெருப்பாய்த் தலை நிமிர்த்துகின்றன.

வாழ்வுக்கும், சாவுக்கும் இடையில் நூலிழையில் தொங்கிய திலீபனின் உயிரை-அந்தக் கடைசி நொடிப்பொழுதை எப்படி அவரால் வலிமைமிக்க ஓவியமாய் வடிக்க முடிந்தது?

அனைவரும் வந்து ஓவியங்களைக் காண்க
விளம்பர ஒத்துழைப்பு அறிவமுது பொத்தகசாலை

(சி-12002) உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன்.





## வற்றாப்பளை கண்ணகை அம்மன்ஆலய

உற்சவ அன்னதான சபை

### புதுக்குடியிப்புப் பிரதேசம்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களால் நடாத்தப்பட்டு வந்த அன்னதான நிகழ்வு நாட்டின் நிலைமை காரணமாக சிறிது காலம் தடைப்பட்டு மீண்டும் இவ்வருடம் புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களினால் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வினை 22.05.2005 ஞாயிறு காலையிலிருந்து ஆரம்பித்து 23.05.2005 திங்கள், 24.05.2005 செவ்வாய் வரை நடாத்த உள்ளோம். மேலும் இத்தொண்டு சிறக்க வர்த்தகப் பெருமக்கள், விவசாயப்பெருமக்கள், தொழிலாளர் பெருமக்கள் மற்றும் அம்பாள் அடியார்கள் அனைவரும் மனமுவந்து இப்பணி சிறப்புற ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டி நிற்கிறோம்.

மேலும் இப்பணி சிறக்க பணம், பொருள் முதலியனவற்றை மனமுவந்து உதவ வரும் தருமசீலர்களுக்காக 21.05.2005 சனி, 22.05.2005 ஞாயிற்றுக்கிழமைகளில் எமது ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் இயங்கவுள்ள விசேட கரும பீடத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பொருளாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



இங்ஙனம்
வற்றாப்பளை கண்ணகை அம்மன்
ஆலய உற்சவ அன்னதான சபை,
புதுக்குடியிருப்புப் பிரதேசம்.

(சி-12001)

# நிவாரணப் பணியில் ஈடுபட்ட இத்தாலியப் பெண் காபூலில் இனந்தெரியாதோரால் கடத்தல்



கிளிமென்ரீனா கென்ரனி என்பவரே ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வைத்து கடத்தப்பட்டுள்ளார். இவர் யாரால் எதற்காகக் கடத்தப்பட்டாரென தமக்கு இதுவரை தெரியவில்லையென ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

(லண்டன்)

**ஆப்கானிஸ்தானில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த இத்தாலிய நாட்டுத் தொண்டர் நிறுவனப் பெண் ஊழியர் ஒருவர் காபூலில் வைத்து கடத்தப்பட்டுள்ளார். இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

பூங்கா ஒன்றிற்கு அருகாமையில் இரவு 8.30 மணியளவில் காரில் சென்று கொண்டிருந்தபோது இவர் கடத்தப்பட்டதாக இத்தாலிய செய்தி நிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவர் கடத்தப்பட்டபோது இவருடன் வேறு இரு ஊழியர்களும் பயணம் செய்து கொண்டிருந்ததாகவும், அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆப்கானிஸ்தானில் நூற்றுக்கு மேற்பட்ட விதவைகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

## குவைத்தின் வரலாற்றில் முதல் தடவையாக பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை

குவைத்தில் முதல் தடவையாக பெண்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

குவைத் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மிகத் தீர்க்கமான ஒன்பது மணித்தியால விவாதத்தின் பின்னரான வாக்கெடுப்பில் 12 வாக்குகள் வித்தியாசத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் காலங்களில் குவைத் நாட்டுப் பெண்கள் பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வாக்களிப்பார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை ஊடகங்களின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து அந்நாட்டு மக்கள் வீதிகளில் கூடியிருந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடு தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு பெரும் வெற்றியாக அமையும் என குவைத் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படும் பெண் உறுப்பினர்களை அமைச்சரவையில் இடம் பெறச் செய்வதும் அவசியமென நிலையத்திலுள்ள மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

# ஒசாமா பின்லேடன், முல்லா உமர் இன்னும் உயிருடனேயே உள்ளனர்!



(லண்டன்)

அல்ஹைய்தா தலைவர் ஒசாமா பின்லேடன், தலிபான் தலைவர் முல்லா உமர் இருவரும் இன்னும் உயிருடன் உள்ளதாகப் பத்திரிகையாளர் ரஹீமுல்லா யூசூப்சாய் கூறியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு ஒளிபரப்பான பி.பி.சி. தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒசாம பின்லேடனும், முல்லா உமரும் உயிருடன் உள்ளனர். பின்லேடன் இறந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. தொடர்ந்து ஒலிநாடா மற்றும் கடிதங்களை அனுப்பி வருகிறார் முல்லா உமர். எனவே, உமரும் உயிருடன்தான் இருக்க முடியும். இருவருமே ஆப்கானிஸ்தானில்தான் ஒளித்துள்ளனர்.

ஆப்கான் பழங்குடியின மக்களோடு மக்களாக வசித்து வருகிறார் உமர். அவருக்கு பழங்குடியினர் பேசும் பாஷ்டோ மொழி தெரியும். பழங்குடியினரும், தலிபான்களும் உமரை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவர்.

ஆனால் பின்லேடனுக்கு பாஷ்டோ அல்லது உருது இரு மொழிகளுமே தெரியாது. அரபு மொழி மட்டுமே அவர் பேசுவார். அடிக்கடி அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்து ஒலி-ஒளி நாடாக்களை வெளியிட்டு வருகிறார்.

கடந்த ஒக்ரோபரில் ஒசாமாவிடம் இருந்து ஒலிநாடா வந்தது. விரைவில் மற்றொரு ஒலிநாடாவை அவர் வெளியிடுவார் என்றார் யூசூப்சாய்.

## ஐந்து பொலிசார் உயிரிழப்பு

இந்தோனேஷியாவில் உள்ள மொலுக்காஸ் தீவில் பொலிஸ் சோதனைச் சாவடி மீது மர்மக்கும்பல் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டு திடீர் தாக்குதல் நடத்தியதில் ஐந்து பொலிசார் உயிரிழந்துள்ளனர்.

இதன் போது பொலிசார் திருப்பிச் சுட்டதில் அதில் மர்மக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் பலியானார். இந்தத் திடீர் தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை.



ஈராக்கிற்குக் கடந்த ஞாயிறன்று விஜயம்செய்த அமெரிக்க வெளியுறவுத்துறைஅமைச்சர் கொண்டலீசாரைஸ் குண்டு துளைக்காத அங்கியுடன் இராணுவ நிலையொன்றைப் பார்வையிட்டார்.



சாதர் நகரில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட ஒருவரின் சடலத்தைச் சவச்சாலையிலிருந்து எடுத்துச் செல்லும் உறவினர்கள்.

# பாக்தாத்தின் நான்கு இடங்களில் பிணக்குவியல்கள் கண்டுபிடிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் உட்பட நான்கு இடங்களில் பிணக்குவியல்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதில் மொத்தம் 46 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

தலைநகர் பாக்தாத்தில் மட்டும் 36 உடல்களும்,ராமாடி நகரில் பத்து உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவுக்கு எதிராகப் போராடி வரும் தீவிரவாத இயக்கத்தினரே இந்த 46 பேரையும் சுட்டுக்கொன்று பிணங்களை மறைத்து வைத்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பிணமாகக் கிடந்த 46 பேரில் பத்து பேர் இராணுவத்தினர், மற்றவர்கள் பொதுமக்களாக இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

## வடகொரிய-தென்கொரிய பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

(சியோல்)

வடகொரியா,தென்கொரியா இடையே தடைப்பட்டிருந்த பேச்சு பத்து மாதங்களுக்குப்பின் மீண்டும் திங்கட்கிழமை தொடங்கியது.

இரண்டுநாட்கள் நடைபெறும் பேச்சுவார்த்தை வடகொரிய எல்லையில் உள்ளகீசோங் நகரில் திங்கட்கிழமை தொடங்கியது. தென்கொரியா சார்பில் வடகொரியா-தென்கொரியா இணைப்புக்கான துணை அமைச்சர் ரீ போங்-கோ தலைமை வகித்தார்.

## ஸ்தம்பிதமடைந்துள்ள சூடான் சமாதானப்பேச்சை மீண்டும் ஆரம்பிக்க ஆபிரிக்கத்தலைவர்கள் இணக்கம்

ஆபிரிக்கத் தலைவர்கள் ஸ்தம்பிதமடைந்துள்ள சூடான் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து இணக்கப்பாட்டை எட்டியுள்ளார்கள்.

லிபியாவின் தலைநகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் டர்பூர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றி இணக்கம் காணப்பட்டதாகச் சூடான் வெளிவிவகார அமைச்சர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்த டர்பூர் நெருக்கடி சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் உயிரைப் பலி கொண்டிருக்கிறது.

இந்நெருக்கடிகளினால் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக மாறியுள்ளார்கள். அரசாங்கம் தமது மக்களைப் புறக்கணித்ததாகக் கூறி இரண்டு ஆயுதக் குழுக்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டதால் நெருக்கடிகள் ஆரம்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




இஸ்லாமிய புனித நூலான குர்ஆனை பம்பாயிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தடுத்து வைத்திருப்பதைக் கண்டித்து உரையாற்றும் இஸ்லாமிய மதகுரு ஒருவர்.

## எல்லையில் நிலவும் அமைதி நம்பிக்கை நடவடிக்கையே

— முஷாரப் —

"காஷ்மீர் எல்லையில் நிலவும் அமைதி, நம்பிக்கையூட்டும் நடவடிக்கையின் ஒரு பகுதியே. இது இருதரப்பு மோதலுக்குத் தீர்வாகாது", என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

கொங்கொங்கில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முஷாரப் இது தொடர்பாகக் கூறுகையில், " காஷ்மீர் எல்லையில் நிலவும்அமைதி, இந்தியாவும்-பாகிஸ்தானும் எடுத்த நம்பிக்கையூட்டும் நடவடிக்கையின் ஒரு பகுதியே. இருதரப்பு மோதலுக்கு இது தீர்வாகாது. இந்தியாவைச் சேர்ந்த பல பத்திரிகைகளில் வெளியாகும் கட்டுரைகள் சில, இதைத் தீர்வாகவே குறிப்பிடுகின்றன. எல்லாப் பிரச்சினைகளுக்கும் இதை நான் தீர்வாகக் கருதவில்லை. தீர்வை ஏற்படுத்துவற்காக எடுக்கப்பட்ட ஒரு நம்பிக்கை நடவடிக்கையாகவே இதைக் கருதுகிறேன்" என்றார்.



அபுகிராய் சிறைச்சாலைக் கைதிகளைச் சித்திரவதை செய்த வழக்கில் சாட்சியமளித்து வெளியேறும் சப்ரினா டி ஹார்மனும், அவரது சட்டத்தரணியும், சக இராணுவப் பெண் ஊழியர்களும்.

## தீவிரவாதிகள்-இராணுவம் மோதல் நேபாளத்தில் 52 பேர் உயிரிழப்பு

நேபாளத்தில் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். நேபாளத்தில் மாவேயிஸ்ட் தீவிரவாதிகள் அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறார்கள். இந்தத் தீவிரவாதிகளை ஒடுக்க இராணுவம் தீவிர வேட்டையாடி வருகிறது.

இந்த நிலையில் ஜராய்டர் சிந்துலி என்ற இடத்தில் இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. சுமார் நான்குமணிநேரம் இந்தச்சண்டை நீடித்தது. இதில் 50 தீவிரவாதிகளும், இரண்டு இராணுவ வீரர்களும் பலியாகினர். 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் காயமடைந்தனர்.

# கிளி.மாவட்டத்தில் பிரதேச, கிராம ரீதியில்

# சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச, கிராம ரீதியாக சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.**

"தற்போதைய இலங்கை அரசின் அரசியல் போக்கும், தமிழ் மக்களின் விழிப்புணர்வும், பங்களிப்பும்" எனும் தலைப்பில் கிராம ரீதியாக மேற்படி கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடர் தலைமையில் கடந்த 15ஆம் திகதியன்று பிற்பகல் 5.00மணிக்கு மாயவனூர் முன்பள்ளியிலும், 16ஆம் திகதியன்று பிற்பகல் 5.00 மணிக்கு பெரியகுளம் முன்பள்ளியிலும் மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. சிறி, கிளிநொச்சி மாவட்ட போராளி மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் முத்து ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

மேற்படி கருத்தரங்கு நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை உள்வாங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு வட்டக்கச்சி சுவிச்சென்றர் முகமட் முன்பள்ளியிலும், நாளை பிற்பகல் 5.00 மணிக்கு இராமநாதபுரம் ம.வியிலும், 20ஆம் திகதியன்று பிற்பகல் 5.00 மணிக்கு கட்டைக்காடு அ.த.க. பாடசாலையிலும், 22ஆம் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு நாவற்காடு சூசையப்பர் ஆலய அருகாமையிலும், அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு சம்புக்குளம் கஜந்தா முன்பள்ளியிலும் மேற்படி சமகால அரசியல் விழிப்புணர்வு கருத் தரங்குகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்காட்சியும் விற்பனையும்

(துணுக்காய்)

துணுக்காய் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் 2005 ஆம் ஆண்டிற்குரிய கண்காட்சியும் விற்பனையும் அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் 9-00 மணிக்கு தையல் டிப்ளோமா மாணவியான ஆறுமுகம் நாகநந்தினி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் கண்காட்சி மண்டபத்தின் நாடாவை கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிகரன் வெட்டித் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மங்கல விளக்கினை அனிஞ்சியன்குளம் கிராமசேவையாளர் அசோகன் அனிஞ்சியன்குளம் பாடசாலை அதிபர் கு. ஜெகதீஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். கருத்துரைகளை மல்லாவி மருத்துவமனை வைத்தியர் திருமதி ஏகாம்பரமூர்த்தி யோகபுரம் மகாவித்தியாலய முதல்வர் திருமதி க.கிருஸ்ணபிள்ளை, துணுக்காய் பிரதேச, மகளிர் போதனாசிரியர் திருமதி கே. தேவதாசன் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஆற்றினார்.தொடர்ந்து கண்காட்சியும்,விற்பனையும் இடம் பெற்றது. மாலை 6-00 மணி வரையும் நடைபெற்ற இந்நிகழ்வின் கிராம அபிவிருத்தி சங்கப் பிரதி நிதிகள் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர். (24)

# திருமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின்

# முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

(திருகோணமலை)

உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் புதிய கல்வியாண்டுக்கான முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் திருகோணமலை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் கே. வீரராஜன் இதில் பிரதம அதிதியாகப் பங்குபற்றினார். மேலும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட நிறுவன மாணவ சங்கத்தின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், திருகோணமலை உள்துறைமுக வீதியில் கட்டடம் ஒன்றில் உயர் தொழில்நுட்ப நிறுவனம் முன்பு இயங்கிவந்தது. கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட கடற்கோளின்போது, நிறுவனம் இயங்கிவந்த கட்டடம் சேதமடைந்தது. அதனையடுத்து, நிறுவனம், வடக்கு-கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமானதும், உப்புவெளியில் அமைந்துள்ளதுமான தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

அங்கு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் நிறுவனம் வகுப்புக்களை மிகவும் கஷ்டத்துடன் நடத்தி வருகின்றது எனவும் தெரிவித்தார்.

வரவேற்புரையை சங்கத்தின் பொருளாளர் எஸ். இளங்கீரன் நிகழ்த்தினார். திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.ஈ. ஆகிய பயிற்சி நெறிகள் இங்கு நடத்தப்படுகின்றன. சுமார் 260 மாணவர்கள் இப்பயிற்சி நெறிகளில் சேர்ந்துள்ளனர்.

நிறுவனத்தின் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், கடற்கோளால் பாதிக்கப்பட்டும், திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனம் இயங்கவேண்டும் என்று உறுதியாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் சித்தியெய்தியவர்கள் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்றுள்ளனர் என்றும் நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது. நிறுவனத்தின் ஆங்கில போதனாசிரியர் ரி. ஜீவகன், வருகை விரிவுரையாளர் எஸ். குகதாஸ் (இலங்கை வங்கி) ஆகியோர் உரையாற்றினர். நிறுவன மாணவர் சங்கத்தின் செயலாளர் பி.தர்ஷன் நன்றி கூறினார்.

# மலசலகூடம் அமைப்பதற்கு மானிய உதவித்தொகை

(கிளிநொச்சி)

ஜே.பி.ஐ.சி. நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மலசல கூடங்கள் அமைப்பதற்கு மானிய உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. ஒரு மலசல கூடம் அமைப்பதற்கு ரூபா 5000 வீதம் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 மலசல கூடங்களும், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 மலசல கூடங்களும், பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 மலசல கூடங்களும், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 25 மலசல கூடங்களும் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென பயனாளிகள் அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

## முன்பள்ளி திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் கலையரசி ஞாபகமாக அமைக்கப்பட்ட முன்பள்ளி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

பரந்தன் உமையாள்புரம் பகுதியில் மாவீரர் கலையரசியின் ஞாபகமாக அவரது உறவினரால் அமைக்கப்பெற்ற இம்முன்பள்ளியானது பரந்தன் அரசியல்துறையினரின் அனுசரணையில் பிற்பகல் 3.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ச)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் மத்திய மருந்தக மகப்பேற்றுமனையின் அபிவிருத்திச்சபை பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த சனிக்கிழமையன்று பிற்பகல் 4.30 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

மேற்படி தெரிவில் தலைவராக டாக்டர் மு. கோபாலபிள்ளை, துணைத் தலைவராக திருமதி சு. சாரதாம்பாள், செயலராக பா.றமாகரன், துணைச் செயலராக மு. செந்தில்குமார், பொருளாளராக சு. சிம்சன்போல் மற்றும் ஏழு நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பெற்றனர். அத்துடன் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் போசகர்களாக மு. அருளம்பலம், கா. நாகலிங்கம், சி. கதிரவேலு ஆகியோரும் தெரிவு செய்யப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 92 இலட்சம் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 92 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வேள் விசன் நிறுவனம் வழங்கியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி சுகாதார சேவைப் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் கருத்துக்களை முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி தர்மேந்திரா, வேள்விசன் நிறுவன தேசிய இயக்குநர் ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து உபகரணங்களை வேள் விசன் நிறுவன தேசிய இயக்குநர் முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து..வி. ஜெயகுலராஜாவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் வேள்விசன் நிறுவனத்தின் வலய முகாமையாளர் ஜி.டி. நைல்ஸ், முல்லை மாவட்ட முகாமையாளர் ஞா. அன்ரனி உட்பட சகல பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

அதேபோன்று பிரதி மாகாண சுகாதார சேவைப் பணியாளர்கள், முல்லை மாவட்ட சுகாதார சேவைப் பணிமனை பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## வர்த்தகர் சங்க உறுப்பினர் தெரிவு

(ஒட்டுசுட்டான்)


ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வர்த்தக சங்கக் கூட்டமும் உறுப்பினர்கள் தெரிவும் நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச வர்த்தகசங்கத் தலைவர் அரிராச்சிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய குழு தெரிவு செய்யப்பட்டது. இதில் மீண்டும் அரிராசசிங்கம் தலைவராகவும், இராசேந்திரம் செயலாளராகவும், சுந்தர் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (05)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாற்றீடான வலுவுள்ளோருக்கு கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் உதவி

(அலுவலக செய்தியாளர்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாற்றீடான வலுவுள்ளோருக்கு கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் சக்கர நாற்காலியும், புடவைகள் சிலவும் வழங்கப்பட்டுள்ளன.



படம்:குகன்

வடமராட்சி கிழக்கில் ஊனமுற்றோர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் திட்ட இணைப்பாளர் ம. அன்ரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களில் மூவருக்கு சக்கர நாற்காலியும், மேலும் 55 அங்கத்தவர்களுக்கு ஒரு தொகுதி உடு புடவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சக்கர நாற்காலியினை எ.எஸ்.பீ. நிறுவனத்தைச் சேர்ந்த உளவளத்துறை நிர்வாக அதிகாரி கற்றீன் வழங்கினார். தொடர்ந்து உடு புடவைகளும் வழங்கப்பட்டன. (கு)

## தொடர்புகொள்க

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கினை வைத்திருந்து அண்மையில் ஏற்பட்ட சுனாமியின் காரணமாக வங்கி கணக்கினை வைத்திருந்தவர் இறந்திருந்தால் அல்லது காணாமற்போயிருந்தால் அருகிலுள்ள இலங்கை வங்கியுடன் உரித்துடையவர்களைத் தொடர்பு கொள்ளும்வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர்.

இலங்கை வங்கிக் கிளையில் மகளிர் பொற்கணக்கு சிறுவர் சேமிப்புக் கணக்கு, 14 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட சேமிப்புக்களில் ஏதாவதில் கணக்கினை வைத்திருந்தவர் சுனாமியின் காரணமாக மரணமாகியிருந்தால் அல்லது காணாமற்போயிருந்தால் அவர் பற்றிய தகவல்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கும் வண்ணம் இலங்கை வங்கி முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

பொதுசன நூலகம்

# விசேட வீட்டு வைபவங்களுக்கு மண்டைதீவில் படையினர் கட்டுப்பாடு

(மண்டைதீவு)

**யாழ். மண்டைதீவுப்பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் தமது வீடுகளில் விசேட வைபவங்கள், சடங்குகள் என்பவற்றைக் கொண்டாடுவதாயின் முற்கூட்டியே கடற்படையினரது அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற இறுக்கமான கட்டுப்பாட்டினைக் கடற்படையினர் விதித்துள்ளனர்.**

மண்டைதீவில் மக்களை குடியமரப் படையினர் அனுமதித்திருப்பினும் அது இன்னமும் முற்று முழுதாக இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாகவே பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

எனவே தமது பாதுகாப்பு வலயத்துள் குடியேறிவாழ்வோர் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் போன்ற வைபவங்களைக் கொண்டாடுவது தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதனைக் காரணம் காட்டியே படையினர் இக்கட்டுப்பாட்டினை விதித்துள்ளனர். (33)

# வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செல்வோர் மீது சிறிலங்கா கடற்படையினர் சோதனைக் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்குச் செல்வோர் மீது சிறிலங்கா கடற்படையினர் சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி அலுவலகம் கொழும்புத்துறை கடற்கரை வீதியை மையமாகக் கொண்டு கடற்படையினரால் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ அதியுயர்பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ளமையைக் காரணம் காட்டியே படையினர் இக்கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இங்கு செல்லும் பொதுமக்களைத் தமது படைமுகாம் நுழைவாயிலில் வைத்து மறித்து அவர்களின் அடையாள அட்டைகளைச் சோதிப்பதுடன், அவர்களுடைய பெயர் விபரங்களையும், அடையாள அட்டை இலக்கங்களையும் பதிவு செய்த பின்னரே மக்களை உட் செல்ல அனுமதிக்கின்றனர்.

அத்துடன் மக்களால் கொண்டு வரப்படும் கைப்பைகளையும் கடும் சோதனை செய்வதுடன் உடற்சோதனைகளையும், மேற்கொள்கின்றனர். தொடர்ச்சியாக படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளால் இவ் அலுவலக செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (33)

# குடும்பநல உத்தியோகத்தர் இல்லை பொதுமக்கள் பெரும் பாதிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப்பகுதிக்கு 14 ஆண்டுகளாக குடும்பநல உத்தியோகத்தர் நியமிக்கப்படாமையால் இப்பிரதேச மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் இதனால் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். அச்சுவேலி தெற்கு, மேற்கு, வடக்கு, பத்தமேனி, கதரிப்பாய் தம்பாலை, வளலாய், இடைக்காடு போன்ற கிராமமக்கள் தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளனர். இப்பிரதேசத்திற்கென ஒரு குடும்பநல உத்தியோகத்தரை உடன் நியமிக்கும்படியும், மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## குடிநீர்க்கிணறு அமைப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சர்வமத சங்கத்தின் நிதியுதவியுடன் புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தில் குடி நீர்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்கான குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இது அமைக்கப்பட்டுள்ளது. (33)

# போக்குவரத்து விஸ்தரிப்புக் குறித்து ஆராய விசேட இயந்திரவியல் நிபுணர்குழு யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் போக்குவரத்துச் சேவைகளை விஸ்தரிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்காக விசேட இயந்திரவியல் நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

நாளை மறுதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இக்குழுவில் இலங்கை அரசின் திறைசேரியைச் சேர்ந்த அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு அரசசார்புடைய போக்குவரத்துச் சேவையான வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் சேவைகளை விஸ்தரிப்பது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் விசேட கலந்துரையாடல்களை மேற்கொள்வர். (33)

## வங்கிக் கிளை மாற்றம்; மக்கள் எதிர்ப்பு

இலங்கை வங்கியின் வேலணைக்கிளையை ஊர்காவற்றுறைக்கு மாற்றுவதற்கு தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் வசிக்கின்ற மக்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும் வேலணையில் இயங்கி வருகின்ற இலங்கை வங்கியின் கிளையே பெரிதும் உதவியாக இருப்பதாகவும் ஆகையால் இவ்வங்கியினை ஊர்காவற்றுறைக்கு மாற்றக் கூடாது என்றும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## கண்காட்சி

(சுன்னாகம்)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் உபகரணம் சம்பந்தமான கண்காட்சி அண்மையில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. கைலாயநாதன் தலைமையில் இடம்பெற்றது.

வலிகாமம் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் கண்காட்சியை நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் கிளையின் முகாமையாளர் விக்கினராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மற்றும் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (41)

# கைதடிப்பிரதேச மயானங்களை புனரமைக்கும்படி கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடிப் பிரதேசத்திலுள்ள மூன்று மயானங்களை மக்கள் பயன்படுத்தும் விதத்தில் புனரமைத்துத் தரும்படி கைதடிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கைதடி ஊத்தல் மயானம், ஐவினைப்பட்டி மயானம், தச்சன்பிட்டி வடக்கு மயானம் போன்றவையே கடந்த காலப்போரினால் கடும் சேதமுற்ற நிலையில் காணப்படுகின்றன. இம்மயானங்களைப் புனரமைப்பது தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்டோருக்கு தெரிவித்தும் இது தொடர்பான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. உடனடியாக மக்கள் நன்மை கருதி இவற்றை புனரமைக்க வேண்டுமெனவும் தேசிய எழுச்சிப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. (28)

## நூல் வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ளது. (கு)

# மண்டைதீவு றோ.க.பாடசாலையில் பாரிய தளபாடப்பற்றாக்குறை

(மண்டைதீவு)

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பாரிய தளபாடப் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குரிய தளபாடங்களுக்கும், ஆசிரியர்களுக்குரிய தளபாடங்களுக்கும், அலுவலக பாவனைக்குரிய தளபாடங்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ்.தொழில் நுட்பக்கல்லூரிக்கு தென்கொரிய அரசாங்கம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நவீன மயப்படுத்துவதற்காக 23 லட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை தென்கொரிய அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியைக் கொண்டு யாழ். தொழில்நுட்பக்கல்லூரியை நவீன தொழில் நுட்பவியல் கல்லூரியாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக ஆறு லட்சத்து 31 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் நிதியில் யாழ். தொழில்நுட்பக்கல்லூரி வளாகத்துள் ஒவ்வொன்றும் மூன்று மாடிக் கட்டடங்களைக் கொண்ட எட்டு கட்டடத் தொகுதிகள் கொரிய தொழில்நுட்பத்தில் அமைக்கப்படும்.

இவற்றில் நவீன தொழில்நுட்ப முறைகள் பற்றிய கற்கைகளை யாழ். மாணவர்களும் தொடரக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுமெனவும் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி ஆசிரியர்களுக்கு நவீன தொழில்நுட்பவியல் பற்றிய பயிற்சிகளை வழங்க தென்கொரிய அரசு முன்வந்திருக்கிறது.

இதற்காக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள் பத்து பேர் அடுத்த மாதமளவில் கொரியா செல்லவுள்ளனர்.

இதில் பொறிமுறை எந்திரவியல், தானியங்கி பொறியியல், மின்சார பொறியியல், தன்னியக்க வலைப்பின்னல் தொழில்நுட்ப பொறியியல் போன்ற துறைகளைச் சேர்ந்த மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பத்து ஆசிரியர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

ஆசிரியர்களுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதன் மூலம் யாழ்.குடாநாட்டு பொறியியல் துறை மாணவர்களது தரத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். (33)

# யாழ். மாநகரப்பகுதியை சுத்திகரிக்க கழிவு காவி இயந்திரங்கள் பற்றாக்குறை

### யாழ். மாநகர ஆணையாளர் க. குணராஜா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப்பகுதியில் சுத்திகரிப்புப் பணிகளைத்திருப்திகரமாக மேற்கொள்வதற்கு கழிவு காவி உழவு இயந்திரங்களின் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக யாழ். மாநகரசபையினரின் கழிவகற்றும் பணிகளுக்கு 17 கழிவு காவிப்பெட்டிகள் உள்ள போதும் இவற்றை நகர்த்திச் செல்வதற்கு ஏழு உழவு இயந்திரங்கள் மட்டுமே உள்ளன. ஏனைய பத்து கழிவுக்காவிப் பெட்டிகளை நகர்த்திச் செல்ல உழவு இயந்திரங்கள் இல்லாத நிலைமையுள்ளது.

இதனால் யாழ். மாநகரப்பகுதிகளில் நாளாந்தம் சேரும் 60 மெற்றிக் தொன் குப்பை கூழங்களில் இருந்து 40 மெற்றிக்தொன் குப்பை கூழங்களை மட்டுமே அகற்ற முடிகிறது.

இந்நிலைமையால் யாழ். மாநகரப் பகுதிகளில் பெரும் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றியிருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் க. குணராஜா மேலும் தெரிவித்துள்ளார். (33)

# தமிழர் பாரம்பரிய கலாச்சாரத்தை பாதுகாக்க யாழ்.மாவட்டத்தில் கலாச்சாரப் பேரவை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கலைஞர்களது தரத்தை மேம்படுத்தவும், தமிழர் பாரம்பரிய கலைகலாசாரங்களைப் பேணிப்பாதுகாப்பதற்குமாக யாழ். மாவட்டத்தில் கலாச்சாரப் பேரவை ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இது பற்றிய ஆலோசனைக் கூட்டம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல கலைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

# கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தல் அ.தி.மு.கழகத்தின் வெற்றியும் தி.மு.கழகம் எதிர் கொள்ளும் சவால்களும்

தமிழக சட்ட சபைத் தேர்தலுக்கான வெள்ளோட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. அதாவது தமிழகத்தின் எதிர்காலம் யார் கையில் இருக்குமென்பதாகக் கூட இந்தத் தேர்தலை கொள்ளலாம். அந்த வகையில் தான் கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெற்றுள்ளது.




இந்தத் தேர்தலின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது. இருகட்சிகளும் "நினைத்தது ஒன்று நடத்ததோ வேறொன்று" என்பது போலவேதான் முடிவுகள் அமைந்துள்ளன. அந்த வகையில் ஆளும் அ.தி.மு.க இரு தொகுதிகளிலும் ஏராளமான வாக்கு வித்தியாசத்தில் தி.மு.கவை தோற்கடித்திருக்கின்றது.

அ.தி.மு.க எதிர்பாராதவிதமாக அதாவது அதிஷ்ரவசமாக மீண்டும் இரு தொகுதிகளையும் தம்வசப்படுத்தியிருக்கின்றது. மக்களவை போலவே இடைத்தேர்தலிலும் வெற்றிவாகை சூடுவோம் எனும் தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஆசை மண்ணாகிப் போயிருக்கின்றது.

ஆளும் கட்சிக்கும், எதிர்கட்சிக்கும் இதுவரை இருந்து வந்த இலைமறை காயான மோதல்கள் இந்தத் தேர்தல் மூலமும் பிரச்சாரம் மூலமும் உச்சக் கட்ட அனலாக கொழுந்துவிட்டெரிந்ததென்னமோ உண்மைதான்!

ஏற்கனவே கடந்த மக்களவைத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் மண்கௌவிய ஆளும் கட்சி, கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தலை நடாத்துவதற்கு முழுமனதுடன் இருந்ததா...? என்றால் அது இல்லை என்றுதான் கூற வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இடைத் தேர்தலை நடாத்தாமல் இருப்பதற்கே ஒற்றைக் காலில் நின்றது.

ஆனால் எதிர்க்கட்சியான தி.மு.க உள்ளிட்ட கூட்டணிகள் இடைத்தேர்தலை நடத்துவதி




லேயே கங்கணம் கட்டி நின்றன. தற்போது தேர்தலும நடந்து முடிந்திருக்கின்றது.

தேர்தல் முடிந்து விட்டது. ஆனால் மழை விட்டும் தூவாணம் போகாத கதையாக தேர்தல் தொடர்பான விமர்சனங்கள்தான் ஓய்ந்தபாடில்லை. கட்சிமீதும், எதிர்கட்சிமீதும் பலவாறான [குற்றச்சாட்]டுக்கள் எழுந்த வண்ணமேயுள்ளன.

அந்த வகையில், ஆளும்கட்சி மீது 90 விதமான குற்றச்சாட்டுக்களும், எதிர்க்கட்சி மீது 10 வீதமான குற்றச்சாட்டுக்களுமே பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. காஞ்சிபுரத்தில் அ.தி.மு.க படுதோல்வியைத் தழுவிக் கொள்ளும என்றும், காஞ்சிமட விவகாரமும் ஒரு காரணமாக அமையுமென்றே நம்பிக்கை வெளிப்பட்டிருந்தது.

ஏனெனில் காஞ்சிமடம் தம் மீது வேண்டுமென்றே தமிழக அரசு அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளதால் காஞ்சிபுரம் இடைத் தேர்லில் தமது செல்வாக்கினை தமிழக அரசிற்கு காட்டவேண்டுமென்று சபதமிட்டதாக ஏற்கனவே கூறப்பட்டதொன்று.

இந்தநிலையில் அ.தி.மு.கவுக்கு அதிருப்தியை ஏற்படுத்திய அதே நேரம் தாமாகவே காஞ்சி மடம் தமக்குதவிபுரிவதாக தி.மு.க துள்ளிக் கூத்தாடியமையும் கண்கூடு.

அதாவது தமிழகரசு காஞ்சிமடத்தின் மீது கைவைத்தமையே காஞ்சிமடம் அவருக்கெதிராக திரும்பிய அதேநேரம் தெரிந்தோ தெரியாமலோ தி.மு.க.வுக்கு சார்பானதாக மாறிவிட்டது எனலாம்.

அது மட்டுமன்றி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே சங்கரமடத்தைச் சேர்ந்த சுந்தரேசஐயர் முதலானவர்கள் விடுதலையடைந்து விட்டனர்.

அதுவும் தமிழஅரசு ஆதாரமின்றியும் தேவையின்றியும் காஞ்சிமடத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்ததாக உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ஜெயந்திரர் மீதான குற்றச்சாட்டுக்களும் இதுவரை சரிவர நிரூபிக்கப்படாமலேயே இருப்பதாகவும் காவல்துறையினர் திண்டாடுவதாகவும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

தமிழ அரசு காஞ்சிமடம் மீது எதற்காக முற்று கையிட்டது என்பது இதுவரை சிதம்பர ரகசிய மாகவேதான் இருந்து வருகின்றது. அத்துடன் தமிழகரசு காஞ்சிபுரத் தேர்தல் பிரச்சாரத்தின் போதாவது காஞ்சிமட விவகாரம் குறித்து வாய் திறந்திருக்க வேண்டும்.

ஆனால் தமிழஅரசு வாய்ப்பூட்டே போட்டுக் கொண்டது. மாறாக மக்களைக் கவரும் முகமாக பல இடங்களில் நலப்பணிகளை முடுக்கிவிட்டு விட்டது. பழைய வீதிகளெல்லாம் திடீரென்று தார் பூசிக் கொண்டிருக்கின்றன. பல இடங்களில் குடிநீர்பபைப்புக்கள் புதிதாக அவதாரம் எடுத்திருக்கின்றன.

இவற்றை விட இன்னும் பல பழைய குன்றும் குழியுமான வீதிகள் புதியனவாக அரிதாரம் பூச தேர்தல் பிரச்சாரக் காலத்திலேயே தயாராகி விட்டன. இடைத்தேர்தல் அறிவிப்பு செய்தவுடனேயே தான் ஆளும் கட்சி நலப்பணிகளை செய்வதாக தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சி முணுமுணுக்கவும் பொருமவும் தான் செய்தன.

ஆனால் எதனையும் காதில்வாங்காத அதி.மு.க தனது சகலநடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டதன் பலாபலனே காஞ்சிபுர இடைத்தேர்தல் வெற்றியாகும்.

இதேபோன்று கும்மிடிப்பூண்டியில் கே.எஸ். விஜயகுமார் (அ.தி.மு.க), வெங்கடாசலபதி (தி.மு.க.) உள்ளிட்ட 16 பேர் களமிறங்கியிருந்தனர்.

இந்தத் தொகுதியை தானும் தமது வசமாக்க முடியும் எனும் தி.மு.கவின் கனவு தகர்ந்திருக்கின்றது. இங்கும் நலப்பணிகளை முடுக்கிவிட அ.தி.மு.க பின்நிற்கவில்லை. வீதிகள், குடிநீர வசதிகள், ஏரிகள் செப்பனிடுதல், உதவித் திட்டங்கள் என்று தமிழகரசு மக்களை திக்குமுக்காட வைத்ததென்னமோ உண்மைதான்.

கும்மிடிப்பூண்டி எனும் வெற்றிக்கனியை எப்படியும் பறித்துவிட வேண்டுமென்பதில் ஓ.பன்னீரசெல்வம் தலைமையிலான அமைச்சர்கள் காலில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டு சுழன்றதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையில் தான் தையல் இயந்திரம், விவசாயக்கடன், பூச்சி மருந்து இயந்திரம், ஊனமுற்றோர் உதவித் தொகை என அரசிடம் இதுவரை உதவி கேட்டு தூங்கிக் கொண்டிருந்த மனுக்கள் யாவும் தூசு தட்டியெடுக்கப்பட்டன.

வீதிகள் திருத்தவும், தார் போடவும் இயந்திரங்கள் தொகுதி முழுவதும் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மொத்தத்தில் புதுமணப் பெண்ணாய் கும்மிடிப்பூண்டி மிளிர்கின்றதாக மக்கள் பூரிப்படைந்தமையும் இல்லாமலில்லை.

ஆனால் தேர்தல் நேரத்தில் நலத்திட்டங்களை அள்ளி வீசுவதனால் மட்டும் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றிட முடியாது. தமிழ அரசுக்கெதிரான எதிர்ப்பவை வீசிக் கொண்டிருப்பதாகவும் இடைத்தேர்தலில் தி.மு.க கூட்டணியே வெற்றி பெறும் எனும் தி.மு.க வேட்பாளா வெங்கடாசலபதியின் நம்பிக்கை துகளாக தகர்ந்து விட்டது.




இந்த இடைத் தேர்தல் பல உண்மைகளை உணர்த்தியுமுள்ளது. பல உண்மைகளை வெளிக் கொண்டும் வந்திருக்கின்றது.

அந்த வகையில் இருதொகுதிகளிலும் அ.தி.மு.க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களாவன.

*. கள்ள வாக்குகளை போடுவதற்காக அ.தி.மு.கவினர் வெளியூர்களிலிருந்து ஆண்கள், பெண்களைக் கொண்டு வந்தமை.

*. கத்தை கத்தையாக போலிக் குடும்ப அட்டைகளை அ.தி.மு.க வினர் வைத்திருந்தமை.

*. தேர்தல் ஆணையம், தேர்தல் பிச்சாரம் முடிந்தவுடன், மந்திரிமார் ஏனையவர்கள் அனைவரும் வெளியேற வேண்டுமென்று அறிவித்திருந்தது. ஆனால் அதி.மு.க வினர் மாறு வேடத்தில் இருதொகுதிகளிலும் வலம் வந்தமை.

*. தமிழகப் பொலிசார் அ.தி.மு.க மீதான குற்றச்சாட்டுக்களை கண்டும் காணாது விட்டமை தி.மு.க வினர் மீது நடவடிக்கை எடுத்தமை.

போன்ற குற்றச்சாட்டுக்கள் வெளிக்கிளம்பி இருக்கின்றன.

ஆனாலும் அடித்து பிடித்து அ.தி.மு.க இரு தொகுதிகளையும் கைப்பற்றியிருக்கின்றது. ஏற்கனவே கடந்த மக்களவைத் தேர்தலில் அதி.மு.க 40 தொகுதிகளையும் கோட்டை விட்டிருந்தமை கண்கூடு.

அதனால் இடைத் தேர்தலையும் விட்டுவிடக் கூடாது என்பதாக தேர்தல் பிரச்சாரத்திலேயே வன்முறைகளை கையாண்டதாக எதிர்க்கட்சிகள கூச்சலிட்டன.

இதனையடுத்தே மத்தியரசை சேர்ந்த ஊழியர்கள் தேர்தல் பணிகளுக்காக அமர்த்தப்பட்டனர். கே.கே.ராவ் எல்லாவற்றுக்கும் பொறுப்பாக மத்தியரசால் நியமிக்கப்பட்டமை தெரிந்தவிடயமே.

ஆனால் தமிழக பொலிசார் மத்தியரசால் நியமிக்கப்பட்ட கே.கே.ராவுக்கு பெரிதாக மதிப்பளிக்கவில்லை என்றும் ஆளும் கட்சிக்கே சார்பாக செயற்பட்டதாகவும் குற்றச்சாட்டு அரும்பியிருக்கின்றது.

இடைத் தேர்தலை நடாத்தி முடிக்க கே.கேரோவ் நியமிக்கப்பட்டார். ஆனால் அவரது பல உத்தரவுகளை தமிழகப் பொலிசார் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகக் கருத்து கணிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

இருந்த போதும் இடைத்தேர்தலை எதுவித வன்முறையுமின்றி நடத்தி முடித்த கே.கே.ராவ்வை எல்லோருமே கதாநாயகனாகவே பார்க்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனெனில் ஆளும் கட்சியின் சலசலப்பிற்கு அஞ்சாதவராக கே.கே.ராவ் செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை மக்களவை படுதோல்வி ஆளும் கட்சியை ஊசாரடைய வைத்துவிட்டது என்று தான் கூறவேண்டும். அ.தி.மு.க.வுடன் கூட்டணி வகித்த தமிழக பாரதிய ஜனதா மக்களவை தோல்வியையடுத்து விலகிக் கொண்டுள்ளதாக அறிவித்திருந்தமையும் தெரிந்ததே.

அத்தனை தடைகளையும் தாண்டி அ.தி.மு.க வெற்றிவாகை சூடியிருப்பதானது எதிர்க்கட்சியான தி.மு.க வை இம்சைக்குள்ளாக்குமென்பதில சந்தேகமில்லை.

ஏனெனில் மக்களவை போன்றேதான் இடைத்தேர்தல் தொகுதியும் தம்வசமாகுமென்றே

அ.கலைவாணி

தி.மு.க. நம்பியிருந்தது.

எனவே எதிர்கால சட்டமன்ற தேர்தலை சவாலுடன் தான் தி.மு.க எதிர்கொள்ள வேண்டும் என்று தான் கூற வேண்டும்.

இல்லையேல் கர்நாடகாவில் சொத்துக் குவிப்பு வழக்கு தொடரப்படுகின்ற நிலையிலும் கூட கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தலில் அதி.மு.க வெற்றி பெற்றுள்ளது என்றால எதிர்கால சட்டசபைத் தேர்தலின் முடிவுகளும் எப்படி எப்படி இருக்கும் என்று யாரால் நிர்ணயிக்க முடியும்.........?

என்றாலும் தமிழக முதலமைச்சருக் கெதிரான எதிர்ப்பவை, நட்பலையாகமாறி வருகின்றதா...? அல்லது அ.தி.மு.க கள்ள வாக்குகள் மூலம் தான் வெற்றி பெற்றுள்ளதா.......? என்பதெல லாம் புரியாத புதிராகவே தான் இருக்கின்றது.

எது எப்படியோ.... இடைத்தேர்தலில் அதி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. எதிர்கால சட்டசபை தேர்தலையும் தமிழஅரசு தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை எனலாம்.



நவம் அறிவுக்கூட புதியகட்டடத் தொகுதி தேசியத்தலைவரால் திறந்து வைப்பு



தேசியத் தலைவர் அவர்களுடன் போராளிக் கலைஞர் இதயராஜ்

# கடந்த வாரத்தில்...

## 09.05.2005 - 15.05.2005

### 09

⇨ மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி சந்திவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறிலங்கா இராணுவ சோதனைச் சாவடியை அகற்றக்கோரி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவேளை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் பலியானதுடன், மாணவிகள் உட்பட பலர் படுகாயமடைந்தனர்.

⇨ திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்திற்குமிடையிலான சந்திப்பொன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

⇨ அரியாலை மாம்பழச்சந்தியில் இடம்பெற்ற உந்துருளி விபத்தில் வயோதிபர் மரணம்.

### 10

⇨ மட்டக்களப்பு சந்திவெளியில் பொது மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்டதாக்குதலைக் கண்டித்து வடக்கு கிழக்கின் பல இடங்களில் அரச எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

⇨ சிங்கள மீனவர் ஒருவரின் சடலம் கைகள், கண்கள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கல்குடாப்பொலிசாரால் மீட்கப்பட்டது.

⇨ ஐ.நா.மனித உரிமை அமைப்பின் சிறிலங்காவிற்கான ஆலோசகர் றோமுன் கோபன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசினார். இதன் போது மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

⇨ மட்டக்களப்பு சந்திவெளியில் இடம்பெற்ற சம்பவத்தைக் கண்டித்து யாழ்.குடாநாடெங்கிலும் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலின் போது குழப்பத்தை விளைவிக்க முயன்ற படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பவங்களும், வாக்குவாதங்களும் இடம்பெற்றதுடன், சில காவலரண்களும் பொதுமக்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டன.

⇨ ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரத்திற்கும் மதநம்பிக்கைக்குமான விசேட தூதுவர் எ.மகரஜி வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குநரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

⇨ லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை தமிழீழத் தேசியத்தலைவர் திறந்து வைத்தார்.

⇨ தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துப் பிரிவினரால் லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் சிறப்பு மருத்துவ சேவை தமிழீழமெங்கும் ஆரம்பிக்கப்பட்டது.

⇨ மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொலை.

### 11

⇨ மட்டக்களப்பு சந்திவெளியில் நடைபெற்ற படுகொலையைக் கண்டித்தும், அரசின் அட்டூழியங்களைக் கண்டித்தும் கிளிநொச்சியில் கண்டன ஊர்வலம் இடம்பெற்றது.

⇨ ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷி கொங்ஹொங்கில் இருந்து கொழும்பை வந்தடைந்தார்.

⇨ மூதூர்ப் பகுதிக்கு அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்வதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் தடைவிதித்தமையைக் கண்டித்து மூதூரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

⇨ நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் சியாம்சரனை புதுடில்லியில் சந்தித்துரையாடினார்.

⇨ மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியில் சந்திவெளிப் பொதுச்சந்தைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் வீதிச்சோதனைச் சாவடி இனந்தெரியாத நபர்களால் தீக்கிரை.

⇨ ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்க தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு சிங்கப்பூர் பயணம்.

### 12

⇨ மட்டக்களப்பு சந்திவெளியில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டைக்கண்டித்து யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

⇨ இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை முனை, ஆழியவளை, சுண்டிக்குளம், முல்லைத்தீவு ஆகிய இடங்களிற்குச் சென்று நோர்வே அரசின் உதவித்திட்டங்களைப் பார்வையிட்டார்.

⇨ மட்டு-வாழைச்சேனை பிரதான வீதியில் வைத்து ஈ.பி.டி.பி இயக்க முக்கியஸ்தர்கள் பயணம் செய்த வாகனம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்.

⇨ இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடினார்.

⇨ இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசிஅகாஷி அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவைச்சந்தித்துப் பேசினார்.

⇨ கொழும்பிலுள்ள இலங்கை விமானப்படை விடுதிக்கு முன்பாகச் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் விமானப்படையினரால் கைது.

### 13

⇨பொதுக்கட்டமைப்பு உருவாகாவிட்டால் அதற்கான மாற்றுத் திட்டம் குறித்து எங்களுடைய தலைமைப்பீடம் நிச்சயமாக தீவிரபரிசீலனை செய்யுமென நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருடனான சந்திப்பின் பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.

⇨ பொதுக்கட்டமைப்பு எப்பொழுது கைச்சாத்தாகுமென சொல்ல முடியாதிருப்பதாக நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் தெரிவிப்பு.

⇨ மட்டக்களப்பு வாழைச்சேனைவீதி வந்தாறுமூலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் பொலிசாரால் மீட்பு.

⇨ திருமலை மாவட்டமெய்வல்லுநர் போட்டியில தமிழீழத் தேசியக்கொடியேற்ற மறுக்கப்பட்டதால் தமிழ் மாணவர்கள் போட்டிகளைப் புறக்கணித்து மைதானத்தை விட்டு வெளியேறினர்.

⇨ மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தார்.

⇨ வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிப் பகுதியைச் சேர்ந்த சுனாமியினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நிவாரணப் பகிர்வில் பாரபட்சம் காட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச செயலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

⇨ மட்டக்களப்பு ஆலையடிவேம்பு தர்மரட்ணம் வித்தியாலயத்திலுள்ள நல்ன்புரி முகாமில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் பலி.

### 14

⇨ பேராதனைப் பல்கலைக்கழக மூன்றாம் ஆண்டு மாணவன் நீச்சல் தடாகத்தில் குளித்த சமயம் நீரில் மூழ்கி மரணம்.

⇨ மட்டக்களப்பு செங்கலடியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலி.

⇨ பொதுக்கட்டமைப்பைப் பொறுத்தவரை எங்களுடைய தரப்பில் ஒரு பிரச்சினையும் இல்லை. ஏனெனில் நோர்வேத்தரப்பு தந்த ஆலோசனையை எங்களுடைய தலைமைப்பீடம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டு அங்கீகரித்துவிட்டது. தெற்கிலே தான் பெரிய எதிர்ப்புப் போன்றதொரு தோற்றப்பாட்டை அரசு உருவாக்கியுள்ளது என ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியுடனான சந்திப்பின் பின்னர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளரிடம் தெரிவிப்பு.



⇨ ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளுக்கும் சர்வதேச நிவாரண உதவிகள் சென்றடைவதற்கான பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா அரசு உருவாக்காவிட்டால் மாற்று நடவடிக்கைகளை உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளுமென ஜப்பானிய விசேட தூதுவர் யசூசிஅகாஷி கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவிப்பு.

⇨ மட்டக்களப்பு பிரதேச ஞானசூனியம் சதுக்கத்தில் இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

⇨ திருகோணமலை உப்புவெளி அலஸ் தோட்ட கடற்கரையில் ஆணொருவரின் சடலம் பொலிசாரால் மீட்பு.

⇨ மாவத்தகம ஹொட்டியாகெல் பிரதேசத்திலுள்ள வடமேல் மாகாண சபையின் ஐ.தே கட்சி உறுப்பினர் குமாரி ரட்ணாயக்கவின் சகோதரரின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் மூவர் பலி.

⇨ தமிழ் நாட்டிலிருந்து படகுமூலம் தாயகம் திரும்பிய 14 அகதிகள் படகு கவிழ்ந்து நீரில மூழ்கியதில் ஏழு பேர் பரிதாபகரமாகப் பலி.

### 15

⇨ லெப்.கேணல் நவம் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவுநிகழ்வும், போராளிக்கலைஞர் இதயராஜின் மிருதங்க அரங்கேற்றமும் நவம் அறிவுக்கூட அரங்கில் சிறப்பாக இடம்பெற்றன.



⇨ தேசியத்தலைவரின் எதிர்பார்ப்பிற்கு அமைய இரணைமடுப்பகுதியில் தாயக மருத்துவமனைக்கான அத்திவாரமிடப்பட்டது.



⇨ யாழ்.கிளாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் இருவரிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலி; ஒருவர் காயம்.

⇨ குமுதினிப் படகு படுகொலையின் இருபதாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

⇨ விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

# பௌத்த கோட்பாடுகளை முப்படையினரும் அனுசரிக்க வேண்டும்

## -பிரதம நீதியரசர் ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா பொலிசாரும் முப்படையினரும் பௌத்த கோட்பாடுகளை அனுசரித்து மக்களுடனான நட்புறவை வெளிப்படுத்த வேண்டுமென பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறியுள்ளார்.

கொழும்பு சம்போதி விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பொலிசாருக்கும், முப்படையினருக்கும் பிரதம நீதியரசர் இந்த அறிவுரையை விடுத்ததுடன், எதிர்வரும் விசாக பௌர்ணமி விழாவை இதற்கான ஆரம்ப நாளாகக் கருதுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வில் கருத்துவெளியிட்ட பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதிப் படுத்தவேண்டிய கடப்பாடு பொலிசாருக்கு இருந்தாலும் அவர்கள் மக்களுடன் அன்பாக நடந்து கொள்ளுவது அவசியம் எனக் கூறியுள்ளார்.

# இறப்புக்களைப் பதிவு செய்ய தற்காலிக ஏற்பாடுகளைக்கொண்ட சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இறப்புக்களைப் பதிவு செய்யும் தற்காலிக ஏற்பாடுகளைக் கொண்ட சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இச்சட்ட மூலத்தின் பிரமாணங்கள் மூன்று வருடங்கள் அமுல்படுத்தப்படும் எனவும், பயங்கரவாத அரச விரோதச் செயல்கள், மக்கள் மத்தியில் தோன்றும் குழப்பநிலை போன்றவற்றால் காணாமற்போனோர் இயற்கையனர்த்தத்தினால் பலியானோர் ஆகியோரின் மரணங்களைப் பதிவு செய்வதற்காக இச்சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட மூலத்தை சமர்ப்பித்து அமைச்சர் அமரசிறி தொடங்கொட கருத்துத் தெரிவிக்கையில்;இது தேசிய ரீதியிலான சேவையை நிறைவேற்றும் முயற்சி எனவும் சுனாமியினால் பலியானவர்களின் இறப்புக்களைப் பதிவு செய்துகொள்ள இது உதவியாக இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைக்கல்வியையும் பல்கலைக்கல்வியையும் இணைத்து திறந்த பாடசாலை முறை

(கொழும்பு)

பாடசாலைக் கல்வியையும், பல்கலைக்கழகக் கல்வியையும் இணைத்துத் திறந்த பாடசாலை முறையை ஏற்படுத்தப்போவதாக தேசியக் கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஜகத் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு மேலும் அவர் கூறுகையில், திறந்த பாடசாலை முறையில் எந்தவொரு மாணவரும் பலதரப்பட்ட கற்கை நெறிகளையும் தொடர முடியும் எனவும் கூறினார்.

இதனை ஆரம்பித்து வைக்கும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது. இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் சனாதிபதி சந்திரிகா பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

# வெலிக்கடை சிறையில் திடீர் சோதனை 15 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெலிக்கடைச்சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது 15 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

சிறைச்சாலைக்கு தொலைபேசிகள் எவ்வாறு கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக மேற்கொண்ட பல தேடுதல் நடவடிக்கைகளின் போது சிறைச்சாலையிலிருந்து 50 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன. (25)

# யாழ். வர்த்தகரின் கடன் அட்டையை திருடிப் பயன்படுத்தியவர் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவரின் கடன் அட்டையை திருடி அதிலிருந்து சுமார் மூன்றுஇலட்சத்து 60 ஆயிரம் ரூபாவைப் பெற்றதாகக் கூறப்படும் ஒருவரை கம்பஹா பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் கொழும்பில் வைத்து குறிப்பிட்ட கடன் அட்டையைத் திருடியுள்ளார்.இதன் போது அந்தக் கடன் அட்டையில் இரண்டு கோடி ரூபா மீதம் இருந்தது இந்த நிலையில் தொடர்ந்தும் பணத்தை எடுத்து வந்த குறித்த கம்பஹா நபர் கடன் அட்டை தன்னியக்கப் பணம் பெறும் கருவியினுள் இருந்து. வெளியில் வராமையை ...து வங்கியின் முகாமையிடம் முறையிட்டபோதே அவரின் திருட்டு வெளியானது. குறிப்பிட்டவர் தற்சமயம் பொலிசாரால் விசாரணை ...டுகிறார். (32)


உ

கணபதி துணை



## வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் 23-05-2005 திங்கள்

### தூக்குக் காவடிக்கான உழவு இயந்திரங்களைப் பதிவு செய்தல்

பொங்கல் தினத்தன்று வாகனங்கள் எதுவும் அனுமதியின்றி ஆலய எல்லைக்குள் செல்ல முடியாது. எனவே, தூக்குக் காவடி கொண்டுவரும் உழவு இயந்திர உரிமையாளர்கள் ஆலய நிர்வாகத்தினரிடம் முன் கூட்டியே பதிவு செய்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

### காவடி உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

பொங்கல் தினத்தன்று ஆலயத்தில் காவடி வாடகைக்குவிடும் காவடி உரிமையாளர்கள் 21-05-2005 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலயத்திற்கு சமுகமளித்து தங்கள் இடங்களைப் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்.

### காவடிக்கான மேளகாரர்களுக்கான அறிவித்தல்

காவடிக்கான மேள உரிமையாளர்கள் 22-05-2005 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் தங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

**தலைவர்,**
**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய**
**ப.பா.ச.**

(6154)



## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:—** கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்.
*Computer Programmer*

**தகைமைகள்:—** BIT கற்கைநெறி அல்லது அதனையொத்த கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணினிக் கல்வியில் பொது/சிறப்புப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழும்,இரண்டு (02) வருட பட்டறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:—** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்க...ட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட... சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் யாழ்சாலை, கரடிப்போக்கு,கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப்பணியகத்திற்கு,23.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04. நற்சாட்சிப் பத்திரங்கள்
05. மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள்

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி.11954)

# இடைத்தேர்தல் முடிவுகளால் அரசியலில் திருப்பம் ஏற்படாது

## -கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர்

(சென்னை)

காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல் முடிவுகளால் அரசியலில் பெரிய திருப்பம் எதுவும் ஏற்படும் என்று கூற முடியாதென இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி தேர்தல் முடிவுகள் பற்றி அவர் கூறியதாவது: இந்த முடிவுகளை யாரும் எதிர்பார்க்கவில்லை. இதற்கான காரணங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும். இனிமேல் தான் இத் தேர்தலில் வெற்றிபெற்றவர்களுக்கு சனநாயக முறைப்படி வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஆளும் அ.தி.மு.க இவ்விரு தொகுதிகளையும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறதே தவிர, புதிய ஆதாயம் எதுவும் கிடையாது.

எனவே அரசியலில் பெரிய திருப்பம் எதுவும் ஏற்படும் என்று சொல்ல முடியாது என்றார்.

# சீக்கியரை உயிரோடு எரித்தவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

(புதுடில்லி)

1984ஆம் ஆண்டு டில்லியில் நடந்த கலவரத்தில் சீக்கியரை உயிரோடு எரித்துக் கொன்ற ஐந்து பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டு பிரதமர் இந்திராகாந்தி சீக்கிய சிப்பாயால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து டில்லியில் சீக்கியர்களுக்கு எதிராக கலவரம் நடந்தது. அதில் ஏராளமான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

அமர் காலனி பகுதியில் சர்தார் பாபா சிங் என்ற சீக்கியர் தனது குடும்பத்துடன் வீட்டைவிட்டு தப்பியோடியபோது அவரை 40 பேர் கொண்ட கும்பல் பிடித்தது. பின்பு அவரது உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீவைத்தனர். இதில் அவர் கருகிப் பலியானார்.

இந்தப் படுகொலை பற்றி பாபா சிங் மனைவி கொடுத்த புகாரை புதிவு செய்ய பொலிசார் மறுத்துவிட்டனர். அதைத் தொடர்ந்து ஆளுநரிடம் முறையிட்டார். அவரது உத்தரவுப்படி பொலிசார் வழக்குப் பதிவு செய்தனர்.

டில்லி மேலதிக நீதிமன்றில் வழக்கு நடந்தது. இந்த வழக்கில் பாபா சிங்கை உயிரோடு எரித்த முக்கிய குற்றவாளிகளான பியரே லால், தரம்பால், ரண்பீர் சிங், ராஜிந்தர்சிங், பாகுமால் ஆகிய ஐந்து பேருக்கும் ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி கவுசிக் தீர்ப்பு வழங்கினார்.

# முஸ்லீம்களை பலிக்கடாவாக்க ராம்விலாஸ் பஸ்வான் முயற்சி

## ஷாநவாஸ் உசேன் குற்றச்சாட்டு

(பாட்னா)

பீகார் மாநில முதலமைச்சராக ஒரு முஸ்லிம் தான் வரவேண்டும் என்ற பிரச்சினையை திரும்பத்திரும்ப எழுப்பி முஸ்லிம்களை பலிகடாவாக்க விரும்புகிறார் ராம்விலாஸ் பஸ்வான் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஷாநவாஸ் உசேன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும்ராம்விலாஸ் பஸ்வான் மதரீதியிலான அரசியலில் ஈடுபடுவதாகவும் உசேன் குற்றம் சாட்டியுள்ளார்.

பீகார் மாநிலத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத்தேர்தலில் லல்லுப்பிரசாத்யாதவ் தலைமையிலான ராஷ்டிரிய ஜனதாதளம் கட்சி தோல்வியடைந்தது. இதன்மூலம் இக்கட்சி தனது 15 ஆண்டுகால ஆட்சியை இழக்க நேரிட்டது. இக்கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட தே.ஜ கூட்டணியும் பெரும்பான்மை பெறவில்லை. ஆனால் பஸ்வான் தலைமையிலான லோக்ஜன சக்தி கட்சி 29 இடங்களைக் கைப்பற்றியது. இக்கட்சி யாரையும் ஆதரிக்காமல் போன காரணத்தால் யாராலும் அட்சியமைக்க முடியாமல் போனது அதையொட்டி இம்மாநிலத் தில் சனாதிபதி ஆட்சி அமுல்ப்படுத்தப் பட்டு அது சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இருந்தாலும் ஆட்சியமைக்க எல்லோருமே துடிக்கிறார்கள். ஆனால் ஒருவராலும் முடியவில்லை. பஜ்வானை நிதீஷ்குமார் கூட சந்தித்துப் பேசினார். அதுவும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் முஸ்லிம் தலைவர் ஒருவரை முதலமைச்சராக் கினால் லல்லுகட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கத்தயார் என்று பஸ்வான் ஒரு புதிய நிபந்தனையை விதித்தார்.

ஆனால் இதையாரும் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் பீகார் மாநில பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் களில் ஒருவரான ஷாநவாஸ் உசேன் பாட்னாவில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் பஸ்வானைக் கடுமையாகக் குற்றம் சாட்டினார். அவர் கூறுகை யில்:

முஸ்லிம் தலைவர் ஒருவர் முதலமைச்சராகவேண்டும் என்ற பிரச்சினையை திரும்பத்திரும்ப எழுப்பி அவர்களை பலிகடாவாக்கப் பார்க்கிறார் ராம்விலாஸ் பஸ்வான். மேலும் மத ரீதியிலான, சாதி ரீதியி லான அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார் பஸ்வான்.

பஸ்வானைத் தவிர வேறு யாரும் ஒரு முஸ்லிம் முதல்வராக வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவில்லை. எந்த ஒரு முஸ்லிம் அமைப்பும் இப்படிக் கேட்கவில்லை. வேறு எந்தத்தலைவரும் அப்படிக் கேட்கவில்லை.

பஸ்வானின் நிலையானது பீகார் மாநிலத்தில் உள்ள முஸ்லிம்களின் நலன்களுக்கெதிரானது. இந்த நாடு ஏற்கனவே மதத்தின் பெயரால் பிளவுபட்டுள்ளது.

அப்படி இருக்கும் போது பீகார் மாநிலத்தையும் மதத்தின் பெயரால், ஜாதியன் பெயரால் பிளவுபடுத்தப் பார்க்கிறார் என்று அவர் மேலும் கூறினார்.

# பெற்றோல், டீசல் விலையை அதிகரிக்க இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்பு

(புதுடில்லி)

பெற்றோல், டீசல் விலையை அதிகரிப்பதற்கு இடதுசாரிக்கட்சிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன. விலையை உயர்த்துவதற்கு பதிலாக தீர்வைகளில் மாற்றம் செய்யும்படி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தின.

பெற்றோல், டீசல் விலைகளை உயர்த்த வேண்டாம். அதற்குப் பதிலாக வேறு வழிவகை காணும்படி நாங்கள் அரசை வலியுறுத்தியுள்ளோம் என கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் து. ராஜா கூறியுள்ளார். முன்னதாக இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் நிதியமைச்சர் ப. சிதம்பரத்தைச் சந்தித்துப் பேசினர்.

சாலைவரி உயர்வை அரசு கிடப்பில் போடவேண்டும். பெற்றோல், டீசல் மீதான கலால் வரித் தீர்வைகளைக் குறைக்க வேண்டுமென இடது கம்யூனிஸ்ட் எம்.பி. தீபங்கர் முகர்ஜி கூறினார். பெற்றோல் விலையை லீற்றருக்கு நான்கு ரூபா 59 சதத்தால் உயர்த்த வேண்டுமென அரசு கூறுகிறது. இதில் ரூபா. 2.52 கலால் வரிஉயர்வு காரணமான உயர்வாகும்.

அதேபோன்று டீசல் விலையை லீற்றருக்கு ரூபா 4.97 உயர்த்த வேண்டும் என்கிறார்கள். இதில் ரூபா 1.53 கலால் வரி உயர்வு காரணமான உயர்வாகும். சாலை வரி லீற்றருக்கு 2.00 ரூபா விதிக்க வேண்டும் எனவும் அரசு கூறுகிறது. பெற்றோலியப் பொருட்களின் விலை கடைசியாக 2004ஆம் ஆண்டு நவம்பரில் உயர்த்தப்பட்டது. சர்வதேச சந்தையில் மசகு எண்ணை விலை அதிகரித்து விட்டாலும்கூட உள்நாட்டில் பெற்றோலியப் பொருட்களின் விலையை அரசு உயர்த்த முடியவில்லை. எனத் தெரிவிக்கப்படுகிறது.


## துயர் பகிர்கின்றோம்

### கந்தையா கிருஸ்ணபிள்ளை



14.05.2005 அன்று இறைவனடி இணைந்த எமது முன்பள்ளி ஆசிரியர் செல்வி. க.சாந்தி அவர்களின் தந்தையார் கந்தையா-கிருஸ்ண பிள்ளை அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கை ஆக்குவது டன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

தகவல்
நிர்வாகம்,
பெற்றோர்கள்,
சகஆசிரியர்கள், மாணவர்கள்

(6143)

## வாடகைக்கு

கிளிநொச்சி A-9 சாலையில் கச்சேரி முன்பாக, கங்கேஸ்வரன் அங்காடி என்னும் கடை வாடகைக்கு விடப்படும். அறைகளும் வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வை. கணபதிப்பிள்ளை,
R.D.S.முன்பாக, பிரதான வீதி,
இல. 1027, திருநகர்,
கிளிநொச்சி.

(6142)

## வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் Vanni Institute of Technology

# Vanni Vision '05

## கணினி உயர் தொழில்நுட்பக் கண்காட்சி

கிளிநொச்சி மாநகரில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப நிறுவகமான "வன்னிரெக்" இலவச கணினி செயல்முறைக் கண்காட்சியொன்றை நடாத்துகின்றது. இக் கண்காட்சியில் கணினி மென்பொருள், வன்பொருள் மற்றும் இலத்திரனியல் பிரயோகங்களை செயன்முறை விளக்கங்களுடன் கண்டு பயன்பெற வருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் :- மே 18,19,20 - 2005
காட்சிநேரம் :- காலை 9.30 - 12.30 மாலை 1.30 - 5.30
இடம் :- வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், கிளிநொச்சி

பதிவாளர்,
வன்னிதொழில்நுட்பவியல் நிறுவகம்,
கிளிநொச்சி.

(சி.11888)

TP 021 228 5876
Fax 021 228 5875
Email registrar@vanni.org
URL www.vanni.org

Vanni Tech
Vanni Institute of Technology

## முதலாவது ஒருநாள் போட்டி லாரா பங்கேற்க மாட்டார்



இன்று ஆரம்பமாகும் பாகிஸ்தானுடனான ஒருநாள் போட்டித் தொடரில் எதிர்பாராத விதமாக மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்டவீரர் பிரையன் லாரா பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

லாரா டெஸ்ட் தொடருக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடவிருப்பதால் அவருக்கு ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு அளிக்கப்பட்டிருப்பதாக தேர்வாளர் மைக்கல் கரிவ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டி இரண்டில் பங்கேற்காத வெவல் ஹின்ட்ஸும் மற்றும் மீட்ரோ கொலின்சும் இப்போட்டித் தொடருக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் லாரா பங்கேற்காமைபெரும் தாக்கத்தை ஏற்படுத்ாதென சபை முகாமையாளர் டொனி ஹவாட் தெரிவிக்கிறார். அவர் இல்லாமலேயே பங்களாதேஷை வென்றதாகக் குறிப்பிடும் அவர் பாகிஸ்தான் அணி அதனைவிட வித்தியாசமான அணி என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

## டெஸ்ட்போட்டியில் பீற்றர்சன் இல்லை முன்னணி வீரர்கள் பலர் அதிர்ச்சி



பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டி அணியில் இங்கிலாந்து அணியில் கெவின் பீற்றர்சன் இணைத்துக் கொள்ளப்படாமை தனக்கு அதிர்ச்சியளிப்பதாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் தெரிவித்துள்ளார்.

இந்த அணியில் அவர் இடம்பிடித்தால் தனது அணியுடனான ஆஷஸ் தொடரில் பீற்றர்சன் பங்கேற்கும் வாய்ப்பும், இங்கிலாந்துக்கு வெற்றி வாய்ப்பும் கிடைக்கலாம் என்றும் பொண்டிங் குறிப்பிட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக வோர்விக்சயர் அணியைச் சேர்ந்த இயன்பெல் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். எனினும் பெல் ஒரு கவுண்டி போட்டியில் மட்டுமே சதமடித்த வேளை பீற்றர்சன் மூன்று போட்டிகளில் சதமடித்தமை குறிப்பிடத்தக்கது.

பீற்றர்சன், இயன் பெல், றொபர்ட் கீ ஆகியோருடன் போட்டி போட்டவர் என்பதுடன் கவுண்டி போட்டிகளில் பங்கு கொள்ளும் ஷேன்வோர்னும் இவரின் வரவின்மை பற்றி அதிர்ச்சியடைந்துள்ளார்.

## பயிற்சியாளர் தெரிவை ஒத்தி வைத்துள்ளது சிறிலங்கா





இந்திய அணி தமது பயிற்றுவிப்பாளரைத்தெரிவு செய்யும் வரை சிறிலங்கா தனது பயிற்றுவிப்பாளரைத் தெரிவு செய்வதை ஒத்தி வைத்திருப்பதாக சிறிலங்காவின் இடைக்கால சபைத்தலைவர் ஜயந்த தர்மதாச தெரிவித்துள்ளார்.

இந்திய, சிறிலங்கா அணிகளின் பயிற்றுவிப்பாளர்களான ஜோன் ரைட், ஜோன்டைசன் இருவரும் சம காலத்தில் ஓய்வில் செல்வதால் புதிய பயிற்சியாளர்களைத் தெரிவுசெய்வதில் அவை தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் கடந்த 13ஆம் திகதி புதிய பயிற்றுநரின் பெயரை சிறிலங்கா அறிவிக்க விருந்தபோதும் இந்தியா அதற்கான நேர்முகப்பரீட்சையை நடத்திய ஐந்து நாட்களின் பின்னர் சிறிலங்காவும் அதற்கான பெயர்களை அறிவிக்கத் திட்டமிட்டது. தற்போது திடீர் மாற்றம் ஒன்றின் மூலம் இடைநிறுத்தப்பட்டது. காரணம் மிடில் செக்ஸ் பயிற்றுனரான ஜோன் எம்பர்ரி என்பவரில் அக்கறை கொண்டிருப்பதால் இந்தத் தெரிவு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மே.தீவு தலைவர் அணிக்கு எதிராக துடுப்பாட்டம், பந்துவீச்சில் அப்ரிடி அபாரம்



மேற்கிந்தியத்தீவுக்குச் சுற்றுலா சென்றுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அங்கு நடைபெற்ற ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் அன்டிகுவா-பாபடோஸ் தலைவர் அணியை 248 ஓட்டங்களால் வென்றுள்ளது.

சிநேகபூர்வமாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் சயிட் அப்ரிடி 46 பந்துகளில் பெற்ற 104 ஓட்டங்கள் உதவியுடன் ஏழு விக்கெட் இழப்பிற்கு 366 ஓட்டங்களைக் குவித்தது. இதில் அப்ரிடி எட்டு ஆறு ஓட்டங்கள் அடித்தார்.

பதிலுக்கு 367 ஓட்டங்கள் என்ற பாரிய வெற்றியிலக்கு நோக்கி ஆடிய அன்டிகுவா கிரிக்கெட் சபைத் தலைவர் அணி 148 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சகலதுறை வீரரான அப்ரிடி 6.4 ஓவர் பந்து வீசி ஆறு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். யூசுப் யுகானா 87 ஓட்டங்களையும், யுனிஸ்கான் 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.



*மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரை தென்னாபிரிக்கா 5-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. கோப்பையுடன் மகிழ்ச்சி பொங்க தென்னாபிரிக்க வீரர்கள். இது சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவு பெறும் மோசமான தொடர் தோல்வி என்பது குறிப்பிடத்தக்கது.*



*ஸ்பெயினில் நடந்து வரும் 'ஸ்பானிஷ் லீக்' கால்பந்து தொடரில் பார்சிலோனா அணி சம்பியனானது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சம்பியனான மகிழ்ச்சியில் இந்த அணி வீரர்கள் பார்சிலோனா நகர தெருக்களில் "பேருந்துபவனி" வந்து ரசிகர்களிடம் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர். உற்சாக வெள்ளத்தில் வீரர்கள்.*

## கிரிக்கெட்டை ஊக்குவிக்கும் வகையில் ஆசிய, ஆபிரிக்கா கண்டங்களில் கிரிக்கெட்

ஆசிய,ஆபிரிக்க கண்டங்களில் கிரிக்கெட்டை ஊக்குவிக்கும் வகையில் இரு கண்டங்களுக்குமிடையே ஆண்டு தோறும் கிரிக்கெட் போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய கிரிக்கெட் சபை (ஏசிசி) மற்றும் ஆபிரிக்க கிரிக்கெட் சங்கம் (ஏசிஏ) இடையே இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானதாக ஏசிசி தலைமை செயலக அதிகாரி அஷ்ரபுல் ஹக் தெரிவித்தார். இதன்படி ஆண்டுதோறும் இரு கண்டங்களுக்குமிடையே மூன்று ஒருநாள் போட்டிகள் நடைபெறும் முதல் தொடர் இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறும்.

இதற்காக ஆ∴ப்ரோ- ஆசியன் கிரிக்கெட் கூட்டுறவு என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு ஆண்டு ஆபிரிக்காவிலும், அடுத்த ஆண்டு ஆசியாவிலும் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.இந்த ஆண்டு போட்டி ஆபிரிக்காவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.




## பட்டம் வென்றார் சபினா



பராகுவே ஓபன் டென்னிஸ் தொடரில் டயனரா சபினா சம்பியன் பட்டம் வென்றார். முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற இத்தொடர் செக் குடியரசிலுள்ள பராகுவேநகரில் நடந்தது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி கடந்த ஞாயிறன்று நடந்தது. இதில் ரஷ்யாவின் நட்சத்திர வீரர் மாரட் சபினின் தங்கை டயனரா சபினா, செக் குடியரசின் ஜுஸானா ஆன்ட்ரஸ் கோவாவை எதிர்த்து விளையாடினார். உலகின் 34 ஆம் நிலை வீராங்கனையான சபினா 7-6, 6-3,என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

## மாகாண மரதனோட்டப் போட்டி யாழ்.மாவட்ட வீரர்களுக்கு இரு இடம்

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் விளையாட்டுத்திணைக்களம் மாகாண மட்டத்தில் நடத்திய மரதன் ஓட்டப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் முதலாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளார்கள்.

மாகாணமட்டத்திலான மரதன் ஓட்டப் போட்டி திருகோணமலையில் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த எ.ஜெயரூபன் முதலாம் இடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த எஸ்.காந்தரூபன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (41)

## புத்தளம்-மன்னார் அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி சமநிலையில் முடிந்தது

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் மாலை மன்னார் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் புத்தளம் விளையாட்டுக் கழகம் மன்னார் பனங்கட்டுக்கொட்டு ஜோசப் விளையாட்டுக் கழகங்கள் மோதிக் கொண்டன. போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. (18)

## கரைதுறைப்பற்று பிரதேச பெருவிளையாட்டு முடிவுகள்

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தடகளப்போட்டி வற்றாப்பளை மங்களேஸ்வரா விலையாட்டுத்திடலில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

14 விளையாட்டுக்கழகங்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகம் 115 புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும், மாமூலை விண்ணொளிவிளையாட்டுக்கழகம் 90 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும், வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் 43 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், பெற்றன.

## பெரு விளையாட்டை முன்னிட்டு திருமலையில் கலந்துரையாடல்

தமிழீழ விளையாட்டு விழாவை முன்னிட்டு திருகோணமலையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தீபன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் அரச அதிகாரிகள் மற்றும் விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## பாடசாலைகளுக்கு இடையிலான பாண்ட் போட்டி முடிவுகள்

மாணவர் எழுச்சி நாளையொட்டி தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பிரிவினரால் வடமராட்சி கல்வி வலயப்பாடசாலை அணிகளுக்கிடையே நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பாண்ட் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் விபரம் வருமாறு: ஆண்கள் முதலாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இரண்டாமிடம்: நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம், மூன்றாமிடம்: பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பெண்கள்:முதலாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இரண்டாமிடம்: வட இந்து மகளிர் கல்லூரி (41)


## மாகாண மட்ட பெருவிளையாட்டு யாழ்.மாவட்டத்தில் நடத்த ஏற்பாடு

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ள பெரு விளையாட்டுக்கள் மூன்று யாழ். மாவட்டத்தில் இடம்பெறுவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உதைபந்தாட்டப்போட்டி யாழ் பொதுவிளையாட்டு அரங்கிலும், கரப்பந்தாட்டப் போட்டி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்திலும், கொக்கி யாழ். பல்கலைக்கழக மைதானத்திலும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (41)

## கோப்பாய், பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் வெற்றி பெற்றன


யாழ்.மாவட்ட பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கிடையே இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கோப்பாய்ப் பிரதேச செயலக அணியும் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றுள்ளன. மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இப் போட்டிகள் யாவும் இடம்பெற்றன.



ஆண்களுக்கான இறுதிப் போட்டி மின்னொளியில் இடம் பெற்றது. இதில் கோப்பாய்ப் பிரதேச செயலக அணியும், நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டதில் கோப்பாய் பிரதேச செயலக அணி மூன்றுக்கு ஒன்று என்ற புள்ளிகளினால் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 2-0என்ற புள்ளிகளால் வெற்றி பெற்றது. (41)

## சிந்தனைக்கு



கலாச்சாரம் உயர்நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகின்றது; மனிதவாழ்வு உன்னதம் பெறுகின்றது; மனிதம் வளர்ச்சி பெறுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# நல்ல நாடகம்!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நன்றாகவே நாடகமாடுகின்றார். பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் மாற்றுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும் எனக் கோருவதோடு சுனாமி மீள்கட்டுமானத்திற்கான நிதியைத் திரட்டுவதற்கான வழியைக் கூறுமாறும் யுத்தத்திற்குத் தமது பிள்ளைகளை அனுப்பத்தயாராக இருக்கின்றார்களா? என்பதைத் தெரிவிக்குமாறும் கேட்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி உரையாடலைக் கேட்டவர்கள் சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகக் காட்டிய உறுதிப்பாட்டையும் அதனை எதிர்ப்பவர்கள் மீது அவர் வீசிய கேள்விக் கணைகளையும் கண்டு விக்கித்துப்போயிருப்பார்கள். ஏனெனில் அவரின் பேச்சு அத்தனை கடும்தொனியில் இருந்தது.

சனாதிபதி சந்திரிகா இத்தனைக் கடும்தொனியில் பேசியமைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. கண்டியில் நடந்த சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோர் மாநாட்டில் பொதுக்கட்டமைப்பின் அவசியம், தேவை என்பன பற்றி வலியுறுத்தப்பட்டமை காரணமாக இருக்கலாம். ஆனால் ஒன்று சனாதிபதி சந்திரிகா அவ்வாறு பேசினாலும் கூட பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அவரின் நிலைப்பாடு உறுதிப்பாடானதாக இல்லை.

அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் 'சண்டேலீடர்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் "பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கையெழுத்துடுவார் என்ற அவரின் அறிவிப்பு மீது நம்பிக்கையில்லை ஏனெனில் அவர் பேசமட்டுமே செய்கின்றார்.பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்தாமல் அறிக்கையை மட்டும் ஏன் வெளியிடவேண்டும்? என எழுப்புகின்ற கேள்வி நியாயப்பாடானதே.

இன்றைய சூழ் நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேச வேண்டிய அவசியம், தேவை உள்ளது என்பது மட்டுமே உண்மையாகும். இதற்கப்பால் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதோ, உடன்பாடுகளை அமுல் செய்ய வேண்டிய அவசியமோ அவருக்கோ அவரது அரசாங்கத்திற்கோ இல்லை.

அதாவது இன்றைய நிலையில் உதவி வழங்குவோருக்குப் பொதுக்கட்டமைப்புக் குறித்து தனது உறுதியான நிலைப்பாடு ஒன்றை வெளியிடவேண்டிய தேவை சனாதிபதி சந்திரிகாவிற்கு உண்டு. ஆயிரம் பொய்களைக் கூறியாயினும் ஒரு கல்யாணத்தை நடத்தி வை என்பது போல் எத்தனை பொய்களைச் கூறியாயினும் உதவி வழங்குவோரிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதே சனாதிபதியின் நோக்கமாகும்.

இந்நிலையிலேயே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி மீதும், ஜாதிக ஹெல உறுமய மீதும் தனது பாய்ச்சலைக் காட்டியுள்ளார். இப்பாய்ச்சலானது போலித்தனமான கண்துடைப்பு நடவடிக்கை என்பதே உண்மையாகும். அதாவது விரைவில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவேன் என உதவி வழங்குவோரிடத்தில் உறுதி கூறியுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதற்கான முயற்சியில் தான் தீவிரமாக உள்ளார் என்பதை வெளிக்காட்ட முற்பட்டுள்ளமையே தனது கூட்டணிக்கட்சிகள் மீதும், தமக்கு வெளியில் இருந்து ஆதரவு அளிப்போர் மீதும் சனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்தியுள்ள சீற்றமாகும்

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் இச்சீற்றம் போலித்தனமானது அவ்வாறில்லாது சனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்தியமை உளப்பூர்வமானவையாயின் அவரால் இன்னமும் ஜே.வி.பி யுடன் இணைந்து அரசாங்கத்தை நடத்தவோ, ஜாதிகஹெல உறுமயவுடன் உறவைக் கொண்டிருக்கவோ எவ்வாறு முடியும்?

ஜே.வி.பி யுடன் ஓரிரு வாரத்திற்குள் இணக்கப்பாடு வருதல் என்பது சாத்தியப்பாடனதல்ல. அவ்வாறு வரமுடியுமானால் சனாதிபதி ஏற்கனவே வந்திருக்க முடியும். அவ்வாறு இல்லாதுவிட்டால் ஜே.வி.பி யுடன் உறவுகளை முறித்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஆகையினால் ஜே.வி.பி யும், சனாதிபதியும், அவரது கட்சியும் பெரும் அரசியல் நாடகம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மையாகும் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் பகிரங்கமாக விமர்சித்தல் என்பது அவர்களிடையிலான புரிந்துணர்வின் அடிப்படையிலானது அதாவது தந்திரமாகவுள்ளது.

அதே போன்றே ஜாதிக ஹெல உறுமயவுடனான உறவும் உள்ளது. அல்லாதுவிடில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் உதவி வழங்கும் மாநாட்டில் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்டு எவ்வாறு பேசியிருக்க முடியும்? துண்டுப் பிரசுரத்தை விநியோகித்திருக்கமுடியும்?

இந்தவகையில் சனாதிபதி சந்திரிகா உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து பெரும் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கெனப் பல மாறுபட்ட பாத்திரங்களுடன் நாடகம் ஒன்றை இயக்கிக் கொண்டிருக்கிறார். இந்நாடகத்தில் சனாதிபதி சந்திரிகாவுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி, ஜாதிகஹெலஉறுமய ஆகிய கட்சிகள் நடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதில் யார் ஏமாந்தாலும் தமிழ்மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள்

# பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள நூலகங்கள் நூலகங்களாகச் செயற்படுவது உறுதி செய்ய வேண்டும்

## –அதிபர்களுக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர் அறிவுரை

(திருமலை)

பாடசாலைகளில் நூலகம் அமைந்துள்ள அறைகள் சில இடங்களில் தேநீர் அருந்துவதற்கும், பொருட்கள் சேமித்து வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நூலகங்கள், நூலகங்களாகப் பயன்படுத்தப்படுவதை அதிபர்கள் உறுதிசெய்ய வேண்டும்'' என்று வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. தியாகலிங்கம், திருமலை மற்றும் மூதூர் கல்வி வலயங்களில் அதிபர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கான நூலக அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான மூன்று நாள் செயலமர்வை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

மாகாணக்கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திப்பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாள் செயலமர்வு, கடந்த ஞாயிறு திருமலை-துளசிபுரம் மனிதவள முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பமானது. ஐம்பது பாடசாலை அதிபர்கள் செயலமர்வில் பங்குபற்றினர்.

அங்குரார்ப்பண நிகழ்வில், கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திப் பிரிவின் கல்விப் பணிப்பாளர் குருரப்பு ஆராச்சி, மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் வி. இராசையா ஆகியோரும் பங்குபற்றினர். மாகாண நூலக அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிக்கல்விப்பணிப்பாளர் என். அனந்தராஜ் ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

"வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுமார் 2000 பாடசாலைகளில் நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. பாடசாலை நூலகங்கள் , வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. பாடசாலை நூலகங்கள், கல்வி சார்ந்ததாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். நூலக அபிவிருத்தியில் பாடசாலை அதிபர்கள் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும். என்று கேட்டுக் கொண்டார்.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின் உரையில் " பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு 20 வயதில் வெளியேறும் ஒரு மாணவனுக்கு அடுத்து வரும் பத்து ஆண்டுகளுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய கல்வியையே ஆசிரிய சமூகம் வழங்க முடியும். தற்போதைய கல்விமுறை, மாணவருக்கு அடுத்த 50 ஆண்டுகளில் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக அமையவில்லை. கற்றலில் தேடலை மேற்கொள்வதற்கு மாணவருக்கு நூலகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அறிவுத்தாகத்தை மாணவனுக்கு ஏற்படுத்த நூலகம் உதவுகின்றது.'' என்றார்.

பாடசாலைக் கல்விமுறை, தொழிற் சந்தையில் வேண்டப்படாத இளைஞர் கூட்டம் ஒன்றையே உருவாக்கி வருகின்றது. பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்கள் தொழில் சந்தையில் வேண்டப்படுபவர்களாக, மாற்றப்படுபவர்களாக விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாக மாற்றப்பட வேண்டும்.

மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவது, கணினிகளைப் பயன்படுத்துவது ஆகியன தொடர்பாக அதிபர்கள் பழமைவாத சிந்தனைகளைக் கடைப்பிடிக்கக் கூடாது. கணினி பழுதடையாமல் இருக்க வேண்டும். நூல்கள் புதிதாக இருக்க வேண்டும். என்ற எண்ணத்தைக் கைவிட்டு, மாணவர்கள் சுதந்திரமாக அவற்றைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மாணவர்களை நூலகத்திற்கு வலுக்கட்டாயமாக அழைத்துச்செல்ல வேண்டும். மாணவர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடியதாக சிந்தனையை அதிபர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்'' என்றும் செயலாளர் கூறினார். மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் வி.இராசையா உரையாற்றினார். (25)

# 35 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்களை கண்டுபிடிக்க 2300 கோடி ரூபாய் தேவை!

## –களஞ்சியங்களிலிருந்தும் ஆயுதங்கள் மாயம்

(கொழும்பு)

சிறிலங்காவில் சுமார் 35 ஆயிரம் ஆயுதங்கள் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இவற்றைக் கண்டுபிடித்து அழிப்பதற்கு 2300 கோடி ரூபா தேவைப்படுமென பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது. பெரும்பாலும் படைகளில் இருந்து தப்பிவந்தோரே ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளதாகவும் அவர்கள் மூலமே ஏனைய குற்றச்செயல்கள் நடைபெறும் இடங்களுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை படையினரின் ஆயுதக்களஞ்சியங்களில் இருந்தும் ஆயுதங்கள் சட்டவிரோதமாக விநியோகிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (32)

# மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் சுயநலத்திற்காக மக்களின் வாழ்க்கையைப் பணயம் வைக்கின்றனர்

## –வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் தமது நலன்கருதி மக்களின் வாழ்க்கையை பணயம் வைப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. புதிய இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டாளர் வாசுதேவ நாணயக்கார இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். மேல்கொத்மலை திட்டத்திற்கு எதிராக சென்கிளயர் நீர்வீழ்ச்சிக்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கு கொண்டதன் பின்னர் கருத்துரைக்கையிலேயேவாசுதேவ இதனைக் குறிப்பிட்டார். மலையகத்தலைவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது ஒரு கொள்கையையும், ஆளும் கட்சிக்கு வந்ததன் பின்னர் ஒரு கொள்கையையும் கடைப்பிடித்து வருகின்றனர். அமைச்சுப் பதவி மற்றும் வேறு விடயங்கள் தமக்குச் சாதகமாக அமையும் தறுவாயிலேயே இவ்வாறான கொள்கை மாற்றங்களை மலையகத் தொழிற்சங்கத் தலைவர்கள் மேற்கொள்கின்றனர். இதனை அவர்கள் ஒரு அரசியல் விளையாட்டாக மேற்கொண்டு வருகின்றனர். இன்றுள்ள அரசாங்கம் ஒரு சனநாயக அரசாங்கம் அல்ல. அதிகமான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதனால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமாகும். எனவே இந்த அரசாங்கம் மக்களின் கருத்தைச் செவிமடுத்து அதன் அடிப்படையில் செயற்பட வாய்ப்பில்லை. இதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியும், தற்போதைய அரசாங்கமும் எவ்வித வேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை. அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னர் ஒரு கொள்கையையும், அரசாங்கம் அமைத்ததன் பின்னர் ஒரு கொள்கையையும் காணக்கூடியதாக உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு வர்த்தகர்களின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலேயே இந்த மேல் கொத்மலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் அதன் மூலம் புவியதிர்வுகள் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாவார். மண்சரிவுகள் ஏற்படவாய்ப்புண்டு. இயற்கை அழியும் அதேநேரம் சூழலிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும். அச்சம் ஏற்பட்டுள்ளதாக வாசுதேவ நாணயக்கார குறிபபிட்டார். இதேவேளை நாம் தொடர்ந்தும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படக் கூடாது. என்பதில் உறுதியாக இருந்து வந்ததாகத் தெரிவித்த புதிய சமசமாஜக் கட்சியின் ஏற்பாட்டாளர் விக்கிரமபாகு கருணாரட்ண புதிய மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான அமைப்பின் நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவையும் தெரிவித்தார். (32)

# இரசாயனப் பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்த அரசு ஆலோசனை!

## - தற்கொலை வீதத்திலும் சிறிலங்கா முன்னணி

(கொழும்பு)

சிறிலங்காவுக்கு இறக்குமதியாகும் இரசாயனப் பொருட்களைக் கட்டுப்படுத்துவது குறித்து சில நடைமுறைகளைக் கைக்கொள்ள அரசு ஆலோசித்து வருகிறது. உலகில் அதிக தற்கொலை இடம்பெறும் நாடுகளில் சிறிலங்காவும் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கைகள் குறித்து அரசு ஆராயவுள்ளது. அதேவேளை சிறிலங்காவில் இடம்பெறும்தற்கொலைகளில் 98 சதவீதமானவை இரசாயன திரவங்களைப் பருகுவதாலேயே இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# சர்வதேச நாடுகள் மத்தியில் வெளியிடப்பட்ட சனாதிபதியின் கருத்துக்களை ஏற்க முடியாது

-பொதுக்கட்டமைப்புக்கும் ஜே.வி.பி இடமளிக்காதென அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் மத்தியில் சனாதிபதி நாட்டின் உள்நாட்டுப்பிரச்சினைகளை வெளியிட்டமையானது ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின்போது சனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் ஜே. வி.பி நேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளது.

சனநாயக இலங்கைக்குள் ஒவ்வொரு கட்சிக்கும் தனிப்பட்ட கொள்கைகள் இருப்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.இந்த நிலையில் சனாதிபதி தமது கருத்துக்களுடன் இணங்காத கட்சிகளின் கொள்கைகளை விமர்சித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

சனாதிபதியின் கருத்துக்களுக்கு அந்த இடத்திலேயே பதிலளிக்க தமது கட்சிக்கு ஆற்றல் இருந்த போதும் நாட்டின் கௌரவத்தை கருத்திற்கொண்டு தாம் அதனை மேற்கொள்ளவில்லை என ஜே. வி. பி குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சட்ட பூர்வமான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் பொதுக்கட்டமைப்பு ஒன்றுக்குஇடமளிக்கப்போவதில்லை என்றும் அது தொடர்பில் தமக்கு உள்ள உரிமையை தாம் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (32)

- மட்டு.சாரதி படுகொலையை ஆட்சேபித்து -

# முச்சக்கர வண்டிச் சாரதிகள் இன்றும் பணிப்புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சேவையில் ஈடுபட்டுள்ள முச்சக்கர வண்டிச்சாரதிகள் நேற்று ஆரம்பித்துள்ள புறக்கணிப்புப் போராட்டம் இன்றும் தொடருமென அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு பிரதேசத்தில் வைத்து இனம் தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது. இந்தப் போராட்டத்தின் காரணமாக 350இற்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# கிளியில் தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சியும் பயிலரங்கும்

தமிழக ஓவியக் கலைஞர் புகழேந்தியின் புயலின் நிறங்கள் ஓவியக் காட்சியும் பயிலரங்கும் கிளிநொச்சியில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது . கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையும், கிளிநொச்சி அழகியல் கலாமன்றமும் இணைந்து நடாத்தும் இவ் ஓவியக் காட்சியும், பயிலரங்கும் இன்று காலை பத்து மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்ற மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

ஓவியர் புகழேந்தி இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சமூகப் பார்வையோடு ஓவியப் பணியை ஆற்றி வருபவர் அவர் தமிழ்நாடு தஞ்சை மாவட்டம் தும்பத்திக் கோட்டையில் பிறந்தவர்.

குடந்தை ஓவியக் கல்லூரியில் பட்டப் படிப்பையும், ஹைதராபாத் மத்திய பல்கலைக் கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பையும் முடித்துள்ளார். சென்னை, ஹைதராபாத்,டெல்கி லக்னோ. பெங்களூர்,மும்பை போன்ற நகரங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான கண்காட்சிகளில் இவருடைய ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழகம் மற்றும் தென் மாநிலங்களில் முக்கியமான இடங்களில் எரியும் வண்ணங்கள்,உறங்கா நிறங்கள், சிதைந்த கூடு,திசை மூட்டம் உள்ளிட்ட எழுபதிற்கும் மேற்பட்ட தனி மனித கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

20ஆம் நூற்றாண்டு ஒரு தூரிகையின் உறங்கா நிறங்கள் என்ற இவரது ஓவியக் கண்காட்சி தமிழகம் மட்டுமல்லாமல் மலேசியா,சிங்கப்பூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு பெரும் வெற்றி பெற்றது.

சிதைந்த கூடு குஜராத் நிலநடுக்கப் பேரழிவு-150அடி நீள ஓவியம் சென்னை-தஞ்சையில் கண்காட்சி நடத்தப்பட்டது.

திசைமுகம் பெரியார் ஓவியக் கண்காட்சி தமிழகம் முழுவதும் முக்கிய 25 நகரங்களில் முப்பது இடங்களைக் கடந்து தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



திசைமுகம்,உறங்கா நிறங்கள்,அமெரிக்கா, கனடா,பிரான்ஸ்,டென்மார்க் :ஆகிய நாடுகளில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டது. புயலின் நிறங்கள் அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்டது.

எரியும் வண்ணங்கள்,உறங்கா நிறங்கள், திசைமுகம், முகவரிகள்,அதிரும் கோடுகள் என்ற தலைப்புக்களில் இவரது ஓவியப் படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

தற்போது தமிழகம் குடந்தை ஓவியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகின்றார்.

ஓவியர் புகழேந்தியின் ஓவியக்காட்சியும் பயிலரங்கும் பூநகரி,மல்லாவி,புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய இடங்களில் எதிர்வரும் முதலாம்திகதிவரை இடம் பெறவுள்ளது.

# விசமருந்திய பௌத்தபிக்கு வைத்தியசாலையில் மரணம்

(கொழும்பு)

பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றிலேயே விசமருந்திய பௌத்தபிக்கு நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் உயிரிழந்தார். 2001 ஆம் ஆண்டு பாடசாலைக்கு வந்த 16 வயது இளம் பெண்மீது பாலியல் வல்லுறவு புரிந்தாகக் குற்றம் சாட்டி பௌத்தபிக்குவான பெல்லான பஞ்ஞானலோகதேரர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இவ் வழக்கை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரோகிணி பெரேரா பிக்குவின் செய்கை அதிர்ச்சியளிப்பதாகவும் இது வெட்கக்கேடான ஒரு விடயம் என்றும் கூறி குற்றவாளிக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தார். தீர்ப்பைக்கேட்டதும் பிக்குதான் மறைத்து வைத்திருந்த விசத்தை எடுத்து அருந்தினார். நீதிமன்றத்தில் மயங்கிவிழுந்த பிக்கு பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த பிக்கு சிகிச்சை பயனளிக்காது மரணமடைந்தார்.அவர் அதிக வீரியம் கொண்ட விசத்தை அருந்தியிருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார்.

# இன்று காசநோய்க்கான சிகிச்சை

இன்று புதன்கிழமை காசநோய்க்கான வைத்திய நிபுணர் டாக்டர் செந்தில்காந்தன் காலை எட்டு மணி தொடக்கம் மாலை இரண்டு மணி வரை காசநோய்க்கான வைத்திய சேவையை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடாத்த இருப்பதால் சகல நோயாளர்களும் மற்றும் நோயாளர்களுடன் தொடர்புள்ளவர்களையும் நேரடியாக வருகைதந்து வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ளும்படி கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# மாமனிதர் சிவராம் நினைவஞ்சலிக் கூட்டம்

மாமனிதர் சிவராம் நினைவஞ்சலிக்கூட்டம் இன்றுபிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கல்வியங்காடு இளங்கலைஞர் மன்றத்தில் இடம் பெறவுள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் இதற்குத் தலைமை தாங்குகின்றார்.தமிழ்,சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களும், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த சங்கமம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கமம் எதிர்வரும் 21ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளதாக முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் தெரிவித்தார்.

இந்தச் சங்கமத்தில் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (20)

## சமாதான....

விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு அவசியமாக அமைக்கப்படவேண்டும் சனாதிபதி இந்த விடயத்தில் தெளிவாகவுள்ளார். பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் அவர் சில தினங்களுக்குள் சில முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவார் என நாம் நம்புகின்றோம்.

சனாதிபதி தன்னுடைய தனிப்பட்ட ரீதியில் பேச்சு நடத்தியபோதும் ,இதனை உறுதிப்படுத்தியதாக பட்டேல் தெரிவித்தார்.

## சனாதிபதிஆட்சி...

மாறாக மக்கள் எம்மிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தால் மாத்திரமே நாங்கள் அதனை ஏற்றுக்கொள்வோம் எனவும், மாத்தளையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.


யாழ்.பிரதேச அரசியல்துறையினருக்கு

எனது நன்றிகள்

கடந்த 12.03.2005 அன்று வவுனியாவில் களவாடப்பட்ட எனது ரூபா17,000 பெறுமதியான கையடக்கத் தொலைபேசியினை துரித விசாரணை மூலம் மீட்டுத் தந்த யாழ்.பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளருக்கும், விசாரணைப்பிரிவுப் பொறுப்பாளருக்கும்,ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வே. செல்வராசா,
இல-16,ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி-11905)


## புத்தர்சிலை....

ஓடின. பின்னர் பேருந்து சேவை ஸ்தம்பித நிலையை அடைந்தது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட் டிருந்தன.

மேலும் நேற்றையதினம் முற்றவெளிக்கு முன்பாக டொக்யார்ட் வீதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டது. பின்னர் அக்குண்டு படையினரால் வெடிக்கவைக்கப்பட்டது. நண்பகலுக்குப் பின்னர் இன்னொரு குண்டுவெடிப்புச் சம்பவம் பேருந்து நிலையப் பக்கமாகவிருந்து கேட்டது. பின்னர் துப்பாக்கிச் சூடுகளும் கேட்டன. நகரில் பதற்றம் ஏற்பட்டது.

இதனிடையில், திருகோணமலை நகரசபையின் செயலாளர் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தல் அதிகாரி ஆகியோர், புத்தர்சிலை அமைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திருகோணமலை துறைமுகப் பொலிசில் முறைப்பாடு செய்தனர். திருமலை நகரசபையின் அனுமதி பெறாது புத்தர்சிலை வைக்கப்பட்டிருப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர்.

கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க, திருகோணமலையில் தற்போது தங்கியிருந்து நிலவரத்தைக் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குளக்கோட்டன் படைப்பிரிவு என்ற பெயரில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. " "தமிழர்க[illegible] கலாச்சாரப் பூமியில் மிகக் கேவலமான முறையில் [illegible] ஒழுங்குகளை மீறி புத்தர்சிலை வைக்கப்பட்டது [illegible]ரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் ஓர் அடித்த[illegible]மாகப் பார்க்கிறோம். உடனடியாக இதனை அகற்றாவிட்டால் ஏற்கனவே எம்மால் முடிவெடுக்கப்பட்ட மாற்றுவழியைப் பயன்படுத்தவுள்ளோம். இருப்பினும் நேற்று உரிய முடிவு எடுக்கப்படாதவிடத்து இன்றும் எதிர்ப்பைத் தொடருமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. யாவருக்கும் பொதுவான சட்டத்தை பாரபட்சமின்றி செயல்படுத்துமாறு பொலிஸ், நீதித்துறை சார்த்தவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். தவறும் பட்சத்தில் தீர்மானிக்கப்பட்ட மாற்றுவழிகள் பயன்படுத்தப்படும். பின்னர் ஏற்படும் விளைவுகளுக்கு மேலே கூறப்பட்டவர்களே பொறுப்பேற்க வேண்டும்" என்ற குளக்கோட்டன் படைப்பிரிவு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க திருமலை பொலிஸ் நிலையத்தில் பொலிசாருக்கும், பௌத்த மதத்தலைவர்களுக்கும் தமிழ்மக்கள் பேரவை உறுப்பினர்களுக்கும் இடையே சந்திப்பு நடந்தது.

இதன்போது புத்தர்சிலையை அங்கிருந்து அகற்றுமாறு தமிழ்மக்கள் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் அதற்குப் பௌத்த மதத் தலைவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எவ்வாறாயினும் இருசாராரும் இணக்கப்பாட்டிற்கு வராது இவ்விடயத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.. (25)

## சனாதிபதி....

காலதாமதம் ஏற்பட்டமையால் இந்த சந்திப்பு இடம்பெறவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## நெடுந்தீவில்...

மன்னாரிலிருந்து தேடி வந்த உறவினர்களாலேயே அது அடையாளம் காணப்பட்டது. சடலங்கள் யாழ். போதனாமருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட படகில் கொண்டு செல்லப்படவுள்ளன. மேலும் மன்னாரிலும் ஆணின் சடலம் கரைஒதுங்கியது. முத்தையா சண்முகநாதன் பெரியகரிசல் மன்னார் என இச் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனிடையே கச்சைதீவில் ஐந்து அகதிகள் இறக்கிவிடப்பட்டுள்ளதாக நெடுந்தீவு வந்த மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் கச்சதீவில் இறக்கிவிடப்பட்டனர் என்று அவர்கள் கூறினர்.

## பொதுக்கட்டமைப்பு....

கட்டமைப்பு ஓர் நிபந்தனையாக முன்வைக்கப்படமாட்டாது எனக் கூறியுள்ளபோதும், மாநாட்டில் பொதுக்கட்டமைப்புக் குறித்து வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நிதியுதவி கிடைக்கப்பெற வேண்டுமானால் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுதல் அவசியமென உதவி வழங்குவோர் வலியுறுத்தியுள்ளனர்.இதேவேளை இரண்டு நாள் உதவிவழங்குவோர் மாநாட்டின் பின் ஊடகவியலாளருக்குப் பேட்டியளித்த நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

இலங்கைக்குக் கிடைத்துள்ள மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களும், சமாதான முன்னெடுப்புக்கள், மற்றும் பொதுக்கட்டமைப்பு என்பன உரியமுறையில் செயற்படுத்தப்பட்டால் மாத்திரமே கிரமமாகக் கிடைக்கும். அல்லது அவைஇடை நிறுத்தப்படலாம் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது. சர்வதேச நாடுகள் உறுதியளித்தபடி 2.2 பில்லியன் டொலராக இருந்த இந்தத் தொகை தற்போது ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளின்அறிவிப்பால் மூன்று பில்லியன் டொலர் அளவை எட்டியுள்ளது என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது